நாடு முழுவதும் உங்களை நாடி
புத்தம் புதிய பொலிவுடன்
ஆதவன் HD
UHF

விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 59 குரோதி வருடம் மார்கழி மாதம்
15 ஆம் திகதி திங்கட்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 29 (30.12.2024)

இடைவிடா இசை
எங்கேயும்.. எப்போதும்..
Athavan Radio
95.3FM
iPhone
Android

### சூடுபிடிக்கும் உட்பூசல்:

## தமிழரசிலிருந்து சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் நீக்கம்

### தீர்மானங்கள் அதிர்ச்சியளிப்பதாக ஆதரவாளர்கள் ஆவேசம்



( கி. வசந்தன் )

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்குவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அதிர்ச்சியளிப்பதாக தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். உறுதியான முடிவொன்றை எடுக்க முடியாத குழப்பகரமான சூழ்நிலையில் எடுக்கப்பட்ட இந்த முடிவு கவலையளிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி வேறு கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் ஊடாக தேர்தலில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். வவுனியாவில் சனிக்கிழமை(28) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்தியசெயற் குழுக்கூட்டத்தின் பின்னர் (தொடர்ச்சி.) 02

## க.பொ.த உயர்தர பரீட்சை நாளையுடன் நிறைவு

### ஆணையாளர் நாயகமும் ஓய்வு பெறுகிறார்!

( முகம்மட் முக்தார் )



நாடளாவிய ரீதியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2024ம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தர பரீட்சைகள் யாவும் நாளை(31) முடிவடைவதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. மேற்படி பரீட்சை கடந்த நவம்பர் மாதம்25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு (தொடர்ச்சி.) 02

## 'தூய்மையான இலங்கை' திட்டம் ஜனவரியில் அமுல்!

(கனுஷியா புஷ்பகுமார்)

புதிய ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி கடமைகளை ஆரம்பிக்கும் போது அரச பணியாளர்கள் வழங்கும் உறுதிமொழி இம்முறை வேறுபட்டதாக இருக்கும் எனவும் அரசாங்கத்தால் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் துய்மை யான இலங்கை (‘Clean Sri Lanka’) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியாக அமையும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. முறையான சுகாதார சூழலை உருவாக்குதல், இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல், டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட புதுமையான திட்டங்களுடன் (தொடர்ச்சி...) 02



## வெடித்துச் சிதறியது விமானம்

### 179 பயணிகள் தீயில் கருகி உயிரிழப்பு

### தென்கொரியாவில் கோர விபத்து

( ஆர்.மனோசங்கர் )

தென் கொரியாவின் தெற்கு ஜியோல்லா மாகாணத்தின் முவான் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடந்த விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்ததாக தேசிய தீயணைப்பு நிறுவனத்தை மேற்கோள் காட்டி யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமானத்தில் மொத்தம் 181 பேர்இருந்தபோதிலும், மீட்கப்பட்ட இரண்டு பேரைத்தவிர மற்ற அனைவரும் விபத்தில்இறந்திருப்பதாக மீட்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மீட்கப்பட்டவர்களில் 84பேர் ஆண்களும், 82 பேர் பெண்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இறந்த ஏனையவர்களின் (தொடர்ச்சி) 02

## அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதி: 75,000 மெ.தொ கொழும்பு வந்தது



75,000 மெற்றிக் தொன் அரிசி நேற்று (29) அனுமதிப்பத்திரமின்றி இறக்குமதிசெய்யப்பட்டுள்ளதாகசுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார். இறக்குமதி செய்யப்பட்ட 75,000 மெற்றிக் தொன் அரிசியில் 32,000 மெற்றிக் தொன் அரிசியும் 43,000 மெற்றிக் தொன் நாட்டு (தொடர்ச்சி...) 02

## விமான விபத்து : இலங்கை அனுதாபம்

( ஆர்.மனோசங்கர் )

தென் கொரியாவின் முவான் விமான நிலையத்தில் நேற்று காலை ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இலங்கை அரசாங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து தென் கொரியாவின் முவான் நோக்கி 181 பேருடன் பயணித்த விமானம் விபத்துக்குள்ளானதில் இருவரை தவிர ஏனைய அனைவரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த துயரச் சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிப்புகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது ஆழ்ந்த (தொடர்ச்சி...) 02

## மனுஷ நாணயக்காரவின் சகோதரருக்கு விளக்கமறியல்



நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் எதிர்வரும் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேநபர் நேற்று கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது , எதிர்வரும் ஜனவரி ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது. (தொடர்ச்சி...) 02

## விமான நிலையத்தில் கொக்கெய்னுடன் பெண் கைது

கொக்கெய்னுடன் இலங்கைக்கு வந்த பெண் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கைதுசெய்தனர். குறித்த பெண் கானாவில் இருந்து வந்தவர் (தொடர்ச்சி...) 02

## மியன்மார் அகதிகளை சந்திக்க அனுமதி வேண்டும்

நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியான்மார் அகதிகளின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக அவர்களைச் சந்திக்க அனுமதி வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (தொடர்ச்சி...) 02

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

## 2025 இல் பாடசாலைகள் நடைபெறும் நாட்கள் குறைப்பு

வருடத்தில் 210 நாட்கள் பாடசாலை நாட்களாக காணப்பட்ட நிலையில் 2025 ஆம் ஆண்டு பாடசாலை நாட்களை 181 நாட்களாக குறைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதிகளவிலான பொது விடுமுறைகள் மற்றும் பாடசாலைகளின் முதலாம் தவணை தாமதமாகத் தொடங்குவதால், அரசப் பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் (தொடர்ச்சி...) 02

## குடும்பப் பெண்களால் நடத்தப்பட்டு வந்த மரக்கறிக் கடைகள் விசமிகளால் தீக்கிரை



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு கல்லடி பழைய பாலத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களால் நடத்தப்பட்டு வந்த பாலத்தில் அமைந்துள்ள இயற்கை விவசாய உற்பத்திகளைக் கொண்ட விற்பனைக் கடைத் தொகுதி சனிக்கிழமை (28) இரவு இனந் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளது. இங்கு சேதனப் பசளைகளைக் (தொடர்ச்சி...) 02

## இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில் இந்திய அரசு மிகுந்த ஆர்வம்

### தமிழகத்தில் ஹக்கீம்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது )



இந்தியா –இலங்கைக்கு இடையிலான பொருளாதாரத் தொடர்பை மேம்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறது என்பது ஒரு புறம் இருக்க, இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையில் நிலவும் எல்லா பிரச்சினைகளையும் நல்ல முறையில் தீர்த்துக் கொள்வதற்கு எங்களது இலங்கை ஜனாதிபதியும், இந்திய பிரதமரும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைந்திருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் (தொடர்ச்சி...) 02

## சூடு பிடிக்கும்...

சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின் சி. சிவமோகனும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இதன்போது சுமந்திரன் குறிப்பிட்டார்.

தேர்தல் காலங்களில் கட்சியினுடைய வேட்பாளர்களை நேரடியாக தாக்கி ஊடக சந்திப்புக்களை நடாத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் சிவமோகன் மீது இருப்பதால் அவரை கட்சியிலிருந்து இடை நிறுத்தி விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரியநேத்திரன் ஏற்கனவே இடை நிறுத்தப்பட்டிருக்கிறார். அவரையும் கட்சியிலிருந்து விலக்கலாம் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த தேர்தலில் கட்சிக்கு எதிரான வகையில் வேறு கட்சிகளோடு அல்லது சுயேட்சை குழுக்களோடு இணைந்து போட்டியிட்டவர்கள் அனைவரையும் உடனடியாக கட்சியிலிருந்து விலக்குவதாக மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. மேலும், வேறுகட்சிகள் மற்றும் குழுக்களுக்காக பிரசாரம் செய்தவர்கள் மற்றும் கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதி தேர்தலில் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிலருக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனையவர்களுக்கும் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் குழுத் தலைவராக தொடர்ந்தும் மாவை சேனாதிராஜா செயற்படுவார் எனவும் கட்சியின் பதில் தலைவராக சி.வி. கே.சிவஞானம் செயற்படுவார் எனவும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பல வாதப்பிரதிவாதங்கள் இருந்த போதிலும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஒரு ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியில் கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது. மாவை சேனாதிராஜா தொடர்ந்தும் கட்சியின் அரசியல் குழுத் தலைவராக செயற்படுவார். தலைவர் பதவி எஞ்சிய காலத்திற்கு பதில் தலைவராக கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக சி.வி. கே.சிவஞானம் செயற்படுவார். பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் வாக்கெடுப்பு இன்றி ஏகமனதாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, தலைவரை நீக்கும் அதிகாரம் மத்தியகுழுவுக்கு இல்லை. தலைவர் தலைவராவே இருப்பார் என தமிழரசு கட்சியின் மத்தியகுழு கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளிநடப்பு செய்த சி. சிவமோகன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், எப்போதும் எமது கட்சி தீர்மானங்களை எடுக்கும்போது அனைவரையும் சாப்பாட்டுக்கு செல்லுமாறு தெரிவித்து விட்டு தீர்மானம் எடுப்பது வழமை. இன்றும் அதே நிலைமை தான் இடம்பெற்றது.இவ்வாறு தான் தேர்தல் நியமனக்குழுவுக்கும் இடம் பெற்றிருந்தது.

தற்போதைய செயலாளர் இருக்கும்போதுதான் இந்தக் கட்சியில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தலைவரை நீக்கும் அதிகாரம் இந்த மத்திய குழுவில் எவருக்குமே இல்லை. அதனை நான் நேரடியாக மத்திய குழுவுக்கு தெரிவித்து விட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்திருக்கிறேன்.என்னுடைய நோக்கம் இந்த கட்சியை சீராக்குவது தான்.

வழக்குகளை பின்வாங்குவதாக சுமந்திரன் வாக்குறுதி வழங்கி இருக்கின்றார். அவரால் சாட்டப்பட்டவர்கள் தான் இந்த வழக்குகளை போட்டார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி. ஆகவே அவரும் அந்த வழக்குகளை பின் வாங்கினால் நானும் எனது வழக்குகளை பின்வாங்கி பொதுச் சபை கூட்டத்திற்கு செல்வதற்கு தயாராக தான் இருக்கிறேன்.

தலைவரை தலைவர் பதவியில் இருந்து நீக்கவே முடியாது. நாங்கள் கேட்டுக் கொண்டது தலைவர் தலைவராகவே இருக்க பதில் தலைவர் கூட்டங்களை நடத்துமாறு தான் கூறியிருந்தோம். ஆனால் அவர்கள் மாறுபட்ட செய்தியை வெளியிடுகிறார்கள். அது அவர்கள் வெளியிட்டது செய்தி அல்ல தலைவர் தலைவராகவே இருப்பார் என தெரிவித்தார்.

## இலங்கையின்...

கிழக்கரையில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிக்காக தமிழகம் வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும், கண்டி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு சனிக்கிழமை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இராமநாதபுரம் மாவட்டம் சார்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான கே. நவாஸ் கனி, மாநில பொருளாளர் எம். எஸ். ஏ. ஷாஜகான், இராமநாதபுரம் மாவட்ட தலைவர் வருசை முஹம்மது, மாவட்ட செயலாளர் பைசல், மாநில துணைச் செயலாளர் மேலப்பாளையம் அப்துல் ஜப்பார் மற்றும் நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். பின்னர் இராமநாதபுரம் விருந்தினர் இல்லத்தில் (28) சனிக்கிழமை மாலை ரவூப் ஹக்கீம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது ; நான் எனது தனிப்பட்ட அலுவல் காரணமாகத்தான் இப்பொழுது இந்தியா வந்திருக்கிறேன். இருந்தபோதிலும் உங்களோடு சில கருத்துகளைப் பகிரும் இந்த நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா –இலங்கை இடையிலான நட்புறவுக்கு மிகப்பெரும் பாலமாகத் திகழ்ந்தவரும், இந்திய பொருளாதாரத்தின் சிற்பியாகத் திகழ்ந்துவருமான – இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களது மறைவுக் செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய அரசினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினருக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இந்திய– இலங்கை நட்புறவுக்குப் பாலமானவர் மட்டும் அல்ல, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய தூணாகவும் திகழ்ந்தவர் என்ற அடிப்படையில், இந்த முழு பிராந்தியத்திலும் அவருக்கென தனிச்சிறப்பும், தனி முக்கியத்துவமும் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அப்படிப்பட்ட பொருளாதார நிபுணரின் மறைவு நம் அனைவரையும் பாதித்திருக்கிறது என்றால் அது மிகை யாகாது. இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு அண்மையில் வருகை தந்து சென்றிருக்கிறார். அவரது இந்த விஜயம், இந்திய,இலங்கை நட்புறவு மென்மேலும் மேம்பட முக்கிய காரணமாக அமையும் என்று நம்புகிறேன்.

## 2025இல்...

பாடசாலைகள் நடைபெறும் நாட்களை 181 ஆக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையை நிறைவு செய்யும் வகையில் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை முதல் மூன்று வாரங்களுக்கு பாடசாலைகள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை ஆண்டு தொழில்நுட்ப ரீதியாக ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பமாகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான 26 பொது விடுமுறை நாட்களில், நான்கு மட்டுமே வார இறுதி நாட்களில் உள்ளது. ஏனைய அனைத்து விடுமுறை நாட்களும் வார நாட்களில் அமைந்துள்ளது. இதனால் 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## விமான விபத்து...

வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு இதனை தெரிவித்துள்ளது

“இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த இழப்பை தாங்கிக்கொள்ளும் மன உறுதியை அவர்கள் பெறவேண்டும்” என்று அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய வேண்டும் எனவும், “காயமடைந்தவர்கள் முழுமையாகவும் விரைவாக குணமடைய எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் அவர்களுடன் இருக்கும்” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மியன்மார்...

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல். டி. பி.தெஹிதெனிய, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் எழுத்து மூலம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மியன்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர். கப்பலில் இருந்த 12 பணியாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ளவர்கள் முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்கு சென்றிருந்தனர். எவ்வாறாயினும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளை பார்வையிட அனுமதி வழங்க முடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அகதிகளை சந்திக்க எவருக்கும் அனுமதி வழங்கக்கூடாது என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் உத்தரவிட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய குறித்த கோரிக்கைக்கு பதிலளித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், புகலிடக் கோரிக்கையாளர்களை அணுகுவதற்கு அனுமதி வழங்குவது குறித்து தமது திணைக்களத்தின் ஊடாக அன்றி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் ஊடாகவே அனுமதி பெற வேண்டும் என தெரிவித்துள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் வாய்மொழியாக இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இது தொடர்பில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கவில்லை எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## குடும்பப் பெண்கள்...

கொண்டு இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட நஞ்சற்ற உணவு வகைகளைப் நகர வாசிகள் வாங்கக் கூடியதாக இருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை தொடக்கம் வெல்லாவெளி வரையான பகுதிகளில் இருந்து பெறப்படும் நஞ்சற்ற இயற்கை சேதன வளமாக்கி மற்றும் காட்டு மற்றும் நாட்டு மரக்கறிகளை மட்டக்களப்பு நகரிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் இடமாக இது இருந்து வந்தது. கடந்த 12 வருடங்களாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 பெண்கள் தமது வாழ்வாதாரத்திற்காக நாளாந்தம் மரக்கறி, அரிசி, அரிசி மா, தேன், நெய், கருவாடு, இலைக்கறி வகைகள், பால், தயிர் போன்ற மேலும் பல கிராமத்து உற்பத்திப் பொருட்களை இந்த இடத்தில் விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டி வந்துள்ளனர்.

## மனுஷ நாணயக்காரவின்...

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர இரோஷன நாணயக்கார, நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் (சிஐடி) சனிக்கிழமை (28) கைது செய்யப்பட்டார்.

பிபிலே பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான திசர இரோஷன நாணயக்கார, பின்லாந்தில் வேலை வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறி தனிநபர்களிடமிருந்து சுமார் 3 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

## க.பொ.த...

டிசம்பர் 20ஆம் திகதி வரை நடாத்தி முடிக்க திட்டமி டப்பட்டிருந்தது. எனினும் திட்டமிட்டபடி பரீட்சைகள் ஆரம்பமாகிய போதும் நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக நவம்பர் 27 ம் திகதியில் இருந்து ஒருவார காலத்திற்கு பரீட்சைகள் நிறுத்தப்பட்டன.

இவ்வாறு நிறுத்தப்பட்ட தினங்களுக்கான பாடங்கள் மீண்டும் கடந்த 21 ம் திகதி மீண்டும் ஆரம்பமாகி நாளை 31 ம் திகதியுடன் முடிவடைகிறது.

இப்பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 3,38000 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் 2312 பரீட்சை மண்டபங்களில் தோற்றியமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சை முடிவடையும் 31 ம் திகதியாக நாளையுடன் தற்போதைய பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தரவும் தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## தூய்மையான...

தூய்மையான இலங்கை (‘Clean Sri Lanka’) என்ற கருத்திட்ட பல வழிகளில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், ஜனவரி மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக இத்திட்டம் நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் பொது சேவை உறுதிமொழியை வழங்கிய போது, இம்முறை 'தூய்மையான இலங்கை' (‘Clean Sri Lanka’) திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிமொழியும் உள்ளடக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்தார்.

மேலும், முதற்கட்டமாக “தூய்மையான இலங்கை” வேலைத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதனை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதற்கும் அனைத்து தரப்பினரின் கருத்துக்களும் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## விமான நிலையத்தில்...

எனவும், அவர் தென்னாபிரிக்க கடவுச்சீட்டுடன் நேற்று (29) அதிகாலை 1.50 மணியளவில் கட்டார் ஏயார்வேஸ் விமானத்தில் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 41 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதான பெண்ணிடமிருந்து சுமார் 4,068 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதன் பெறுமதி 142 மில்லியன் ரூபா என சுங்க பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

## அனுமதிப்பத்திரமின்றி...

அரிசியும் உள்ளடங்குவதாகவும், சுங்கத்திற்கு அனுப்பப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அருக்கொட குறிப்பிட்டார். நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் கடந்த 4ஆம் திகதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெடித்துச் சிதறியது...

11 பேரின் பாலினம் உறுதிப்படுத்தப்பட வில்லை. இடிபாடுகளில் இருந்து இரண்டு விமான ஊழியர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தாய்லாந்தின் பேங்கொக்கிலிருந்து அதிகாலை 1:30 மணிக்கு புறப்பட்டு காலை 8:30 மணிக்கு முவான் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க திட்டமிடப்பட்டிருந்த ஏர் விமானத்தில் 173 கொரிய பயணிகள், இரண்டு தாய்லாந்து பயணிகள் மற்றும் ஆறு பணியாளர்கள் இருந்தனர்.

போயிங் 737-800 ரகமான அவ்விமானம் முதலில் தரையிறங்க முயன்ற போதும், அது முடியாமல் போனதால் பின்னர் விமான நிலையத்தை சுற்றி வந்து மீண்டும் தரையிறங்க முயன்றது, ஆனால்

விமானம் ஓடுபாதையின் முடிவில் இருந்த ஒரு கட்டமைப்பில் மோதி, தீப்பிடித்து எரிந்தது. விமானம் தரையிறங்கும் கியர் செயலிழந்ததால் விமானம் ஓடுபாதையை விட்டு விலகி வேலியில் மோதியதாக யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளில் உதவ 1,562 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 490 தீயணைப்புத் துறை ஊழியர்கள் மற்றும் 455 காவல்துறை அதிகாரிகள் அடங்குவர் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான இந்த விமானம் 2009ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு போக்குவரத்து அமைச்சக தரவுகளின்படி, 1997ஆம் ஆண்டு குவாமில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட விமான விபத்துக்குப் பின்னர், தென் கொரிய விமான நிறுவனத்தால் ஏற்பட்ட மிக மோசமான விபத்து இதுவாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களில் தென் கொரியாவில் நடந்த மிகவும் மோசமான விமான விபத்தாகவும் இந்த விபத்து பதிவாகியுள்ளது. மேலும் இந்த விபத்தில் விமானம் அடையாளம் காணமுடியாத அளவிற்கு சிதைவடைந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில், முவான் விமான நிலையத்தில் நடந்த சோகமான சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அனைவரிடமும் ஆழ்ந்த மன்னிப்பு கோருவதாக ஜெஜு விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்திற்கு முன்னதாக விமானத்தின் இயந்திரத்தில் பறவை மோதியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. விபத்தை நேரில் பார்த்தவர்கள் அளித்த சாட்சியத்தின்படி, விமானத்தின் எஞ்சினில் தீப்பிழம்புகள் இருப்பதைக் கண்டதாகவும், சம்பவத்திற்கு முன்பு பல வெடிப்புகள் கேட்டதாகவும் தெரிவித்தனர்.

விமான நிலையத்திற்கு அருகில் வாடகை வீட்டில் தங்கியிருந்த 41 வயதான யூ ஜே-யோங், விபத்துக்கு முன் விமானத்தின் வலது இறக்கையில் ஒரு தீப்பொறியைக் கண்டதாகக் கூறினார்.

மேலும், "விமானத்தில் ஒரு பெரிய வெடிப்புச் சத்தம் கேட்டபோது, விமானத்தில் ஒரு பிரச்சினை இருப்பதாக என் குடும்பத்தினரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்" என்று யூ தெரிவித்துள்ளார்.

சோ என அடையாளப்படுத்திக் கொண்ட மற்றொரு சாட்சி கூறுகையில், விபத்து நடந்தபோது விமான நிலையத்திலிருந்து 4.5 கிலோமீட்டர் தொலைவில் நடந்து கொண்டிருந்ததாகக் கூறினார்.

மற்றொரு சாட்சியான 70 வயதான கிம் யோங்-சியோல், விமானம் முதல் முயற்சியில் தரையிறங்கத் தவறிவிட்டதாகவும், விபத்துக்கு முன்பு மற்றொரு முயற்சிக்காக திரும்பிச் சென்றதாகவும் கூறினார்.

வானத்தைப் பார்த்து, தரையிறங்கத் தவறிய பிறகு விமானம் மேலே ஏறுவதைக் கண்டதாகவும், அதற்கு முன்பு "பலத்த வெடிப்பு" சத்தம் கேட்டதாகவும், "வானத்தில் கரும்புகை எழுவதைக் கண்டதாகவும்" கிம் கூறினார்.

இந்நிலையில், பறவை மோதியதால் தரையிறங்கும் கியர் செயலிழந்ததால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றனர். சரியான காரணத்தைக் கண்டறிய காவல்துறை மற்றும் தீயணைப்பு அதிகாரிகள் சம்பவ இடத்திலேயே விசாரணையைத் தொடங்கினர்.

கடந்த புதன்கிழமை கசகஸ்தானின் அக்தாவ் அருகே அஸர்பைஜான் ஏர்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானது, இதில் விமானத்தில் இருந்த 67 பேரில் 38 பேர் பலியாகினர்.

அஸர்பைஜான் தலைநகர் பாகு விலிருந்து அஸர்பைஜான் ஏர்லைன்ஸ் விமானம் ரஷ்யாவின் தெற்கு செச்சினியா பிராந்தியத்தில் உள்ள க்ரோஸ்னிக்கு சென்றுகொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகியிருந்தது. செச்சென் தலைநகர் க்ரோஸ்னிக்கு செல்லும் வழியில் ரஷ்ய வான் பாதுகாப்பிலிருந்து விமானம் சுடப்பட்டதாகவும், அதை திசைதிருப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் பல தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு செயிண்ட் ஜோன் ஸிலிருந்து கனடாவின் ஹாலிஃபாக்ஸ் வந்த விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட பிரச்சினையால், ஓடுபாதையில் இருந்து சறுக்கி பகுதியளவு தீப்பிடித்ததால், விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.





தென் கொரியாவின் முவான் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடந்த விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்தனர். விமான விபத்தில் சிதைவடைந்த விமானத்தின் கோரக்காட்சிகளை படங்களில் காணலாம்.

# அரசாங்கத்தின் மிகப்பெரிய அரிசி களஞ்சியசாலைக்கு அமைச்சர் விஜயம்

## மீண்டும் செயற்படுத்த அமைச்சர் வசந்த உறுதி





(எம்.ரீ.ஆரிப்)

கல்கமுவவிலுள்ள 40,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான அரிசியை சேமிக்கும் திறன்கொண்ட 22 கிடங்குகளைக் கொண்ட மிகப்பெரிய அரசாங்க அரிசி களஞ்சியசாலைக்கு வர்த்தக,உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க சனிக்கிழமை (28) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அரிசிக்குத் தேவையான உலர் நிலையை பராமரிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இந்த நெல் ஆலை சேமிப்பு வளாகம் 1977 ம் ஆண்டு முதல் கைவிடப்பட்டுள்ளது. அதனை மீண்டும் பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நாட்டில் மீண்டும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாத வகையில் தொழில்நுட்ப அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள் குழுவைக் கொண்டு பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களுக்குள் இந்த அரிசி சேமிப்பு வளாகத்தைப் புனரமைப்பதற்கு தேவையான மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் நாட்டு மக்களின் தேவைக்காக கல்கமுவவிலுள்ள மிகப்பெரிய அரிசி சேமிப்பக வளாகத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் வசந்த இதன்போது தெரிவித்தார்.

# அதிபர்,பிரதி அதிபர்,நியமனங்கள்: கல்வி அமைச்சு வழிகாட்டல் வெளியீடு

(முகம்மட் முக்தார்)

அரசாங்க பாடசாலைகளில் அதிபர் நியமனங்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும்அது தொடர்பாக பயன்படுத்த வேண்டிய உத்தியோகபூர்வ இலச்சினை பாவனை பற்றியும் கல்வியமைச்சு வழிகாட்டலையும் வெளியிட்டுள்ளது.

கல்வியமைச்சின் வழிகாட்டல் அறிவுறுத்தலுக்கமைய,

தேசிய பாடசாலையொன்றின் அதிபர்,பிரதி அதிபர், உதவி அதிபர் ஆகியோரின் நியமன அதிகாரி கல்வி அமைச்சு செயலாளராவார். அதற்கமைய கல்விச் செயலாளரினால் வழங்கப்பட்ட

நியமனக் கடிதத்தின் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட வகையைச் சார்ந்தோர் தமது உத்தியோகபூர்வ பதவி முத்திரையைப் (Official Rubber Stamp) பயன்படுத்த வேண்டும்.

தமக்கு வழங்கப்பட்ட நியமனத்திற்கு முரண்பட்ட வகையில் உத்தியோக முத்திரையைப் பயன்படுத்தும் அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபனக்கோவையின் XLVIII 31 ம் பிரிவிறாகமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம். தேசிய பாடசாலையொன்றின் அதிபருக்கு உதவி அதிபர், பிரதிஅதிபர் நியமனங்களை வழங்கும் அதிகாரம் எதுவுமில்லை. மேலும் அவ்வாறான முறைகேடான நியமனங்களை வழங்கி அவருக்கு கட்டுப்படுமாறு தேசிய பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களை அதிபர்கள் வற்புறுத்துவதும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக கருதப்படும்

இதே போல் மாகாணப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் 1AB>1C தரப் பாடசாலைகளுக்கு அதிபர், பிரதி அதிபர்,உதவிஅதிபர் நியமனங்களை வழங்குவது சம்பந்தப்பட்ட மாகாண கல்விச் செயலாளராவார்.

தரம்-11 தரப் பாடசாலையின் அதிபர், பிரதி,உதவி அதிபர் பதவிகளுக்கு நியமனம் வழங்க வேண்டியது மாகாணக் கல்விப் பணிப்பாளர்களும், தரம்-111 பாடசாலைகளுக்கு அதிபர், உதவி அதிபர்களை நியமனம் செய்ய வேண்டியது வலயக் கல்விப்பணிப்பாளர்களாவர்.

பாடசாலைகளுக்கான பொறுப்பு அதிபர்களுக்கான நியமனங்கள் யாவும் பகிரங்க விண்ணப்பம் கோரலின் அடிப்படையிலேயே இடம்பெற வேண்டும்.

பாடசாலை தரங்களுக்கேற்ப இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்கள் இருக்கையில் குறைந்த தரம் உடைய அதிபர்களை பாடசாலை பொறுப்பு அதிபர்களாக நியமனம் செய்யக்கூடாது.

இது தொடர்பாக ஏற்கனவே அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச்சேவைகுழு, கல்வி அமைச்சு ஆகியன பல சுற்றுநிருபங்களை கடந்த காலங்களில் வெளியிட்டுள்ளமையை மாகாண மட்ட கல்வி உயர் அதிகாரிகள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டுமெனவும் கல்வியமைச்சு கேட்டுள்ளது.

# அரச ஊழியர்களின் புத்தாண்டு முற்பணம் 15000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்

## அரசதுறை தொழிற்சங்கங்கள் கோரிக்கை!

(முகம்மட் முக்தார்)

அரசாங்க ஊழியர்களுக்கு புத்தாண்டு முற்பணம் வழங்குதல் தொடர்பாக பொது நிருவாக அமைச்சு வெளியிட்டுள்ள 21/2024 ம் இலக்க சுற்றுநிருபம் உடனடியாக வாபஸ்பெறப்பட்டு முற்பண தொகை அதிகரிக்கப்பட்ட சுற்று நிருபம் வெளியிடப்பட வேண்டுமென அரச துறை தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தில் புத்தாண்டுக்கான முற்பணக் கடனாக 4000 ரூபாவை வழங்குவதாகவும் அதனை 10 மாத தவணைகளில் அறவிடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முற்பணத்தை வழங்குவதன் பிரதான நோக்கம் அரச ஊழியர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

இச்சுற்றறிக்கை 2015 ம் ஆண்டை அடிப்படையாக கொண்டு வெளியிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 ம் ஆண்டின் வாழ்க்கைச் செலவுக்கும் 2024 ம் ஆண்டின் வாழ்க்கைச் செலவுக்கும் வித்தியாசம் தெரியாத உயரதிகாரிகள் பொது நிருவாக அமைச்சில் இன்னும் உள்ளனரா?என சிந்திக்க வேண்டியுள்ளதாக தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

அண்மையில் அரசாங்கம் அசவெசும குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா 6,000 ரூபா வீதம் வழங்க தீர்மானித்து பணமும் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஒரு அசவெசும குடும்பத்தில் 03 பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு 18,000 ரூபா பாடசாலை உபகரணக் கொள்வனவிற்காக இலவசமாக வழங்கப்படுகையில் ஒரு அரச ஊழியரின் 03 பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்காக முற்பணமாக வெறும் 4,000 ரூபாவை வழங்குவதென்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானமல்ல.

எனவே அரச ஊழியர்களுக்கான முற்பண தொகை எல்லையை 15,000 ரூபாவாக அதிகரித்து புதிய சுற்றறிக்கையை வெளியிட வேண்டுமென அரச துறை தொழிற்சங்கங்கள் பொதுநிருவாக அமைச்சை கோரியுள்ளன.

# நிந்தவூரில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் கடற்கரை பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கடந்த சனிக்கிழமை (28) இரவு களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது அஸ்லம் வீதி, நிந்தவூர் -07 பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து சுமார் 02 கிராமும் 580 மில்லி கிராமும் கொண்ட ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் நிந்தவூர் பொலிஸாரிடம் மேலதிக சட்டநடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டதுடன் கைப்பற்றிய போதைப்பொருளும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த கைது நடவடிக்கையானது களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையின் பிரதான பொலிஸ் பரிசோதகர் என் எல். கிரிசாந்தவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா பயணிகளால் போக்குவரத்து நெரிசல்

(எஸ்.டொரின்)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 200,000 க்கும் அதிகமானோர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விடுமுறை காலத்தை கழிக்க சென்றுள்ளதாக சுற்றுலாத்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. இதனால், சுற்றுலா தலங்களுக்கு செல்ல முடியாத அளவுக்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனவே, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், உயிர் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் தலத்தின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு விடுமுறைக் காலத்தை கழிக்குமாறு சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் கலாநிதி ருவன் ரணசிங்க அனைத்துப் பிரஜைகளையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஜெனரல் சவேந்திர சில்வா ஓய்வு



ஜெனரல் சவேந்திர சில்வா, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் இலங்கை இராணுவ செயற்பாட்டு சேவையில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இது தொடர்பில் இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 தசாப்தங்களாக இலங்கையின் பாதுகாப்பிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கிய இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, 2020 ஜனவரி 1 ஆம் திகதி முதல் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக சேவையாற்றினார். இவர் இலங்கை இராணுவத்தில் தியத்தலாவயிலுள்ள இலங்கை இராணுவ பீடத்தில் 19 ஆவது அதிகாரி கேடட் ஆட்சேர்ப்பு பாடநெறியில் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி இணைந்தார். சவேந்திர சில்வா வடக்கு, கிழக்கை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையில் விசேடமாக செயற்பட்டிருந்தார். அந்த மனிதாபிமான நடவடிக்கையில் 58வது படைப்பிரிவின் தளபதியாக செயல்பட்டார். பின்னர் 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி இராணுவத் தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மே 31, 2022 வரை அந்தப் பதவியில் பணியாற்றினார். அதன் பிறகு, அவர் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாகி நான்கு ஜனாதிபதிகளின் கீழ் அவர் செயற்பட்டிருந்தார்.

# உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்:** இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும்.

**ரிஷபம்:** இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம்.

**மிதுனம்:** இன்று உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள்.

**கடகம்:** இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

**சிம்மம்:** உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும்.

**கன்னி:** நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள்.

**துலாம்:** இன்று பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

**விருச்சிகம்:** உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம்.

**தனுசு:** இன்று சமநிலையான நாளாக இருக்காது.

**மகரம்:** உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும்.

**கும்பம்:** இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம்.

**மீனம்:** இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையாக இருங்கள்.

# இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:43 வரை சதுர்த்தசி பின்பு அமாவாசை.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 12:18 AM வரை கேட்டை பின்பு மூலம்.
**யோகம்:** அமிர்த,சித்த.
**சந்திராஷ்டமம்:** பரணி,கிருத்திகை
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**குளிகை:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**எமகண்டம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

# மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதன் காலமானார்



ஈழத் தமிழ் இலக்கிய உலகில் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக பிரகாசித்த மூத்த படைப்பாளர் நா.யோகேந்திரநாதன் காலமானார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகேந்திரநாதன் (வயது 80) நேற்று நீர்வேலியில் காலமானார்.

1960 களில் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் நேரடியாகப் பங்கெடுத்த அவர் தன் வாழ்நாளின் கடைசி வரை எழுத்துலகில் பிரகாசித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு புதுவாழ்வு கொடுக்குமா அரசு..?

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா நகரில் சனிக்கிழமை அன்று ஆரம்பமான இந்தப் போராட்டம், வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கையெழுத்துக்கள் திரட்டப்பட இருக்கின்றன.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக நடந்த இந்த கையெழுத்து திரட்டலில், பெருந்திரளானோர் ஆர்வத்துடன் பங்கேற்று ஒப்பமிட்டதை காண முடிந்தது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புலிகள் மீள் உருவாக்கம் செய்யப்பட்டதாகக் கூறி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியே கையெழுத்து திரட்டும் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் பேரார்வத்தோடு, இந்த நிகழ்வுகளில் பங்கேற்று இருப்பது ஒரு திருப்தியை தருகிறது.

உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகளுக்கும் அதிகமாகி விட்டது. தமிழ் மக்கள் இன்னமும் சுதந்திர காற்றை அனுபவிக்கவில்லை என்ற உணர்வோடு வாழும் நிலை தான், இன்று வடக்கு, கிழக்கில் நிலவுகிறது. விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் அல்லது புலிகளோடு சேர்ந்து செயல்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்களே ஏராளமாக இருக்கின்றனர். இவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்பதே, போராளிகள் நலம்புரிச் சங்கத்தின் கோரிக்கையாக இருக்கிறது. புலிகளோடு சேர்ந்து பயங்கரவாத செயல்பாடுகளுக்கு ஒத்துழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பலருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரம், இன்னும் சிலர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்புக்காக காத்திருப்பவர்கள். 25,20 ஆண்டுகளுக்கு மேல் சிறைகளில் வாடுபவர்களும் இதில் அடங்குகின்றார்கள்.

கொழும்பில் குண்டு வைக்க வந்தார் என்ற சந்தேகத்தின் பேரில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆனந்த சுதாகரன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார். இவருடைய மனைவி, கணவனின் ஏக்கத்துயரில் உயிரிழந்தார். இரண்டு குழந்தைகளோடு வாழ்ந்து வந்த இந்த தாய் பிரிந்ததும், குழந்தைகள் தனித்து விடப்பட்டனர்.

மனைவியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக, நீதிமன்ற அனுமதியோடு, அரசியல் கைதியான அவரது கணவர் ஆனந்த சுதாகரன் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மூன்று மணி நேரமே அவருக்கு அவகாசம் வழங்கப்பட்டது. இறுதிக்கிரியை கடமை முடிந்த கையோடு, சிறை அதிகாரிகள், அவரை வாகனத்தில் ஏற்றினர். அப்போது, செய்வதறியாது அனாதரவாக நின்ற அவரது 5 வயது குழந்தையும் அந்த சிறை வாகனத்தில் ஏறியது.

உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த இந்த காட்சி, சிங்கள ஊடகங்களிலும் மனிதாபிமான கண்ணோட்டத்தோடு பார்க்கப்பட்டிருந்தது. "எனக்கு அம்மா இல்லை... நான் அப்பாவோடு போகப் போகிறேன்..."

என அந்தப் பிஞ்சு அழுத போது, சிறைச்சாலை அதிகாரிகளும் கண்ணீர் சிந்தி நின்றனர். கல்நெஞ்சு படைத்தோரையும் கசிய வைத்த இந்த காட்சி, தென்பகுதி மக்களிடமும் மனிதாபிமானத்தின் எச்ச சொச்சங்களை காணமுடிந்தது. அந்த அரசியல் கைதியை விடுவித்து குழந்தையை தந்தையோடு சேர்த்து விடுங்கள்... என சிங்கள ஊடகங்களே பகிரங்கமாக அரசிடம் வேண்டுகோள் விடுத்தன.

என்றாலும், அப்போது (2018), நல்லாட்சியில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, தன்னுடைய மனிதாபிமானத்தை காட்ட முன்வரவில்லை. புலிச் சந்தேக நபரை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வது, தனது அரசியலுக்கு குந்தகமாகிவிடும் என்பது அவருடைய நிலைப்பாடு. கொழும்பில் ரோயல் பார்க் கொலை சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். தனது காதலியை கொலை செய்த ஒருவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. அந்தக் கொலையாளிக்கு பொது மன்னிப்பு வழங்கிய மைத்திரிபால சிறிசேன, இந்த அரசியல் கைதியை விடுவிப்பதில் மனிதாபிமானம் காட்டவில்லை. தந்தையை விடுதலை செய்யுமாறு கோரி, அந்தக் கிளிநொச்சி குழந்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனிடம், நேரடியாக மனு ஒன்றை கொடுத்திருந்தும், கவனத்தில் கொள்ளாது கைவிட்டு விட்டார்.

இதுதான் இந்த நாட்டின் அரசியல். தென்பகுதி பேரினவாதிகளை திருப்திப்படுத்தி, அரசியல் இருப்பை காப்பாற்றிக் கொள்வது தான், 70 ஆண்டுகால வரலாறு.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழர் தரப்பு கோரிக்கை விடுத்த போதெல்லாம், "அரசியல் கைதிகளே இலங்கையில் இல்லை" என்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ஷ இதனை அறிவித்திருந்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே சிறைகளில் வாடுகிறார்கள். புலிகளோடு தொடர்பானவர்கள் என்று இவர்களுக்கு முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகளாக இருந்த கருணா அம்மான், பிள்ளையான்... உட்பட முக்கியஸ்தர்கள் நாட்டில் சுதந்திரமாக இருக்கின்ற பொழுது, புலிகளுக்கு உதவினார்கள் என்ற போர்வையில், சந்தேகத்தில் கைதானவர்கள், தண்டனை அனுபவிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது...?

இந்த நிலையில் தான், அரசியல் கைதிகளை, விடுதலை செய்யுமாறு கோரி கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படுகிறது. மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் இந்த அரசாங்கம், பேரினவாத சிந்தனைகளுக்குள் புகுந்து விடாமல், மனிதாபிமான அடிப்படையில் அரசியல் கைதிகள் விவகாரத்தை யதார்த்ததோடு அனுகுவதுதான் ஆரோக்கிய அரசியலாக இருக்கும். ஆகவே, வாழ்க்கையை தொலைத்து நிற்கும் இந்த அரசியல் கைதிகளுக்கு வாழ்வு கொடுக்க வேண்டியது இந்த அரசின் கடமையாகும்.



# புதிய அரசாங்கத்திற்கு 100 நாட்கள் பூர்த்தி!

ஜே.வி.பி முகத்தோற்றமாக அடையாளப்படுத்தப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது நூறு நாள் ஆட்சியை பூர்த்தி செய்ய இன்னும் இருப்பது மூன்று நாட்கள் மாத்திரமே.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க கடந்த செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியாக பதவியேற்றார்.

ஒரு அரசாங்கத்தின் ஒட்டு மொத்த சேவையையும் 100 நாட்களில் பூர்த்தி செய்து விட முடியாது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும்.

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், நியமிக்கப்பட்ட இடைக்கால அமைச்சரவையாக இருக்கட்டும் அல்லது நடைபெற்று நிறைவடைந்த நாடாளுமன்றத் தேர்தலில் நியமிக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும் வெறும் மேடைப் பேச்சுக்களில் மாத்திரமே அதிக ஆர்வம் காட்டுவது தெளிவாகியுள்ளது.

ஒரு அரசாங்கமானது மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஐந்து வருடங்களில் செய்து நிறைவு செய்ய வேண்டிய பணிகளை நூறு நாட்களிலே செய்து முடிப்பது என்பது சிரமம் தான் எனினும், புதிய அரசாங்கத்தில் ஜனாதிபதி தவிர்த்து ஏனையவர்கள் அனைவரும் அரசியலுக்கு புதியவர்கள் என்பதை பல இடங்களில் நிரூபித்து விட்டனர். அதிலும் விசேடமாக கல்வி அறிவைத் தாண்டி அரசியல் தெளிவு இல்லை என்பது பல வியடங்களில் தெளிவாகியிருந்தது.

உண்மையிலேயே, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் பெற்ற வெற்றி வரலாற்றில் எழுதப்பட்டு விட்டது.

ஜே.ஆர். ஜயவர்தனவின் மாபெரும் வெற்றியை அடுத்து தற்போது அநுரவின் வெற்றி பார்க்கப்படுகிறது.

அநுர அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டு நூறு நாட்கள் ஆகவுள்ள போதிலும், தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து அரிசி பிரச்சினைக்குள் சிக்குண்டு தவிக்கிறது, அடுத்ததாக கல்வித் தகைமை என தொடர்ந்தும் பல சவால்களை சந்தித்து வருகின்றனர்.

அரிசி நெருக்கடியில் தலையிடுவதை அநுர தரப்பு தவிர்த்து வருகிறது. சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிக்கா ஆகியோரின் ஆட்சியிலும் இதே அரிசி சிக்கல் எழுந்தாலும் அவர்களிடம் காணப்பட்ட அரசியல் தெளிவாலும், ஞானத்தாலும் அதனை நிவர்த்தி செய்தனர்.

தனியார்

> ஒரு அரசாங்கத்தின் ஒட்டு மொத்த சேவையையும் 100 நாட்களில் பூர்த்தி செய்து விட முடியாது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும்



இறக்குமதியாளர்கள் மூலம் சுமார் 72,000 மெட்றிக் டொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும், அரிசித் தட்டுப்பாட்டில் அரசாங்கத்தின் தலையீடு பூச்சியமாகவே உள்ளது.

அரிசி போன்றதொரு அத்தியாவசியப் பொருளுக்கான தட்டுப்பாடு என்பது கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதால் மாத்திரம் தீர்ந்து விடாது அதில் அரசாங்கம் தலையிட வேண்டும் அப்போது தான் நாட்டில் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றுக்கும் அடித்தளம் இட்டதாக தெரியவில்லை. ஐ.எம்.எப் எனப்படும் சர்வதேச நாணய நிதியத்துடன் மறுசீரமைப்புகள் கொண்டுவரப்படும் என அரசாங்கம் அப்போது பிரசாரங்களை மேற்கொண்டு இருந்தாலும், வழங்கப்பட்ட வாக்குறுதிகளின்படி, இதுவரையில் எந்த மாற்றமும் கொண்டு வரப்படவில்லை.

மாகாண சபை முறைமைகளில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் மேலும் குழப்ப நிலையை உருவாக்குகிறது.

சர்வதேச நாடுகளுடனான தொடர்புகளை தொடர்வதில் காட்டி வரும் ஆர்வமின்மை மற்றும் சீனாவுக்கு நன்றி தெரிவிக்க சென்று தாய்வானின் பெயரை குறிப்பிடுவது உண்மையிலேயே அரசாங்கம் தெரியாமல் மேற்கொள்ளும் தவறுதல் தானா?

தற்போது நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கம் தனியே ஒரு கட்சி சார்ந்தது அல்ல. அது ஒரு கூட்டணி. ஜே.வி.பி எனும் கட்சியே தேசிய மக்கள் சக்தியின் கூட்டணியாக கருதப்படுகிறது. ஆக, ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி இரண்டும் இணைந்ததே இந்த புதிய அரசாங்க கூட்டணி.

கூட்டணிகளாக இரு வேறு கொள்கைகளுடன் முன்னோக்கி செல்ல ஒரு போதும் முடியாது.

பெயருக்கு பின்னால் பட்டங்களை இணைத்துக் கொள்வதால் மாத்திரம் அரசியல் செய்து விட முடியாது. அந்த பட்டங்களுக்கு ஏற்றாற் போல சற்றாவது சிந்தித்து செயல்பட்டால் நிச்சயமாக நாடு கோரும், நாட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரும் இந்த மாற்றம் ஏற்படலாம். அது வெறுமனே எதிர்ப்பார்பாக மாத்திரம் இருந்து விடக் கூடாது.

எந்தவிதமான வெளிப்படைத்தன்மையும் இன்றி நடத்தி வரும் இந்த ஆட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்கனவே பல கேள்விகளும், சந்தேகங்களும் எழ ஆரம்பித்து விட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்துவதனால் மாத்திரம் அரசின் கடமைகள் நிறைவடைந்து விடுமா அதனால் மாத்திரம் மக்களை திருப்திப்படுத்தவும் முடியாது.

சிறந்த கலந்துரையாடல்களும், விவாதங்களுமே இந்த அரசாங்கத்தை மேலும் முன் கொண்டு செல்ல உறுதுணையாக இருக்கும் என்பதில் எதுவித சந்தேகங்களும் இல்லை.

எவ்வாறாயினும், "புதிய அரசாங்கம், மழலை அரசாங்கம் "என்ற அடையாளங்கள் இனியும் இல்லை. அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்று நூறு நாட்கள் பூர்த்தியடையவுள்ள நிலையில், காலம் செல்ல செல்ல அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து மக்களுக்காக மாற்றமடையும் அரசாங்கமாக மாறும் என நம்பிக் கை கொள்வோம். ■



**கனூஷியா புஷ்பகுமார்**



# தீவக மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு விரைவில் தீர்வு

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

( பு.கஜிந்தன் )

தீவக மக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்க இருக்கின்றோம். இது





தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன் விரும்பிகளால், வட இலங்கை சர்வோதய குடிநீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து ரையாற்றிய அவர், கடல் நீரை நன்னீராக்கி குடிநீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் வேறு குடிநீர் மூலங்களையும் கண்டறியவேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இந்த ஊர் மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்திப் பலன்பெறவேண்டும் என ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# நெற் செய்கை பாதிப்பு; அரச கணக்கெடுப்பில் பாரபட்சம்

**சபா குகதாஸ்**

கடந்த நாட்களில் நடைபெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் பெருமளவு பெரும் போக நெற் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர்.



அவர்களுக்கான நஷ்ட ஈடு வழங்கும் நெறிமுறையில் வடக்கு விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நஷ்ட ஈடு வழங்குவதாக அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு கமநல நிலையங்கள் ஊடாக படிவங்கள் வழங்கப்படும் நிலையில் நெல் விதைப்பின் ஆரம்ப அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டு இடைப்பட்ட காலத்தில் அழிவைச் சந்தித்த விவசாயிகள் உள்வாங்கப்படுவதுடன் அவர்களின் முழுமையான அழிவிலும் அறைவாசிக்குக் குறைவான நிலப்பரப்புக்களே பதியப்படுவதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆரம்ப அழிவை எதிர் கொண்ட விவசாயிகள் பலர் அடுத்த கட்ட நெல் விதைப்பை மேற் கொள்ள முடியாத நிலையில் பணம் இல்லாது தடுமாறுகின்றனர். காரணம் ஏற்கனவே கடன்பட்ட நிலையில் தான் முதற்கட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் அரிசிக்கு ஏற்பட்ட பற்றாக்குறை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படாது தடுப்பதற்கு உள் நாட்டு உற்பத்தி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் அரசும், விவசாய அமைச்சும் அதன் அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட விவசாயிகளை வஞ்சிக்காது பாகுபாடு காட்டாது பாதிப்பின் உண்மையை விரைவாகக் கள ஆய்வுக்கு உட்படுத்தி ஆரம்ப அழிவு மற்றும் இடைக்கால அழிவு இரண்டையும் பாதிப்பாக ஏற்று நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

# உணவு அருந்திக் கொண்டிருந்தவர் திடீர் மரணம்

( பு.கஜிந்தன் )

யாழ்ப்பாணம் – உரும்பிராய் பகுதியில் உணவு அருந்திக் கொண்டிருந்த நபர் உடல் சுகவீனமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதன்போது உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை குவேந்திரன் (வயது 62) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்று முன்தினம் மதியம் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவேளை அவருக்கு மூச்சு விடச் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சை கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். ஆஸ்துமா காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஐஸ் -ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் கைது

( பு.கஜிந்தன்)

ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் 5 ஆயிரத்து 830 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரத்து எழுபது மில்லிக்கிராம் ஹெரோயின் என்பவற்றுடன் 41 வயதுடைய பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயதர்சனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பூரண அனுசரணையோடு கருகம்பனை பொது அமைப்புகளும் விதையனைத்தும் "விருட்சமே" செயற்றிட்டமும் இணைந்து நடாத்திய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றுக் காலை கருகம்பனை சந்தியில் முன்னெடுக்கப்பட்டது.

# மீன்பிடி வாடிகள் அகற்றப்படல் அமைச்சரால் உடன் நிறுத்தம்

## பருத்தித்துறை - முனை கடற்றொழிலாளர்கள் பேச்சுவார்த்தை



மீன்பிடி வாடிகள் அகற்றுவதை உடன் நிறுத்துமாறு அமைச்சர் இ.சந்திரசேகர் குறித்த திணைக்கள அதிகாரிக்குத் தெரியப்படுத்தியதுடன் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

நாடு பூராகவும் இந்த நிலை இருக்கும்போது குறித்த ஒரு இடத்து மீனவர்களுக்கு மாத்திரம் வாடிகளை அகற்றுமாறு அரச உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தியுள்ளமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்களின் மீன்பிடி வாடிகள் அகற்றப்பட வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் இரண்டு வாரங்களின் பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கரையோரம் பேணல் திணைக்களம் அறிவித்துள்ளமை தொடர்பில் மீனவர்கள் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்டச் செயலர் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் மகஜர்களையும் கையளித்தனர்.

இந்த பேச்சுவார்த்தையின் பின்னரே அமைச்சர் நிறுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட மீனவர்களே தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். இலங்கை பூராகவும் கடற்கரையோரங்களில் மீனவர்களின் மீன்பிடிவாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமே மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது இவ்வாறிருக்க பருத்தித்துறை – முனை கடற்றொழிலாளர்களின் கரையோர வாடிகளை மாத்திரம் அகற்றுமாறு கரையோர பேணல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது ஏன்? இதனால் எமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிப்படையும்." – என்று மீனவர்கள் அமைச்சரிடமும் ஆளுநரிடமும் மாவட்டச் செயலரிடமும் முறையிட்டனர்.

# தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராகச் சுமந்திரன்

## சி.வி.கே.சிவஞானம் அறிவிப்பு

( கி.வசந்தன் )

தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் எனத் தமிழரசு கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசு கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு




தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய நாடாளுமன்ற குழு பேச்சாளராகப் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனை நியமித்துள்ளமையினால் அவர் நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிப்பார்.

எனினும், தமிழரசு கட்சியினுடைய ஊடக பேச்சாளராகத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயல்படுவார் என்றும் தெரிவித்திருந்தார்.

# வேட்பாளரின் தந்தையை வாளால் வெட்டிய சந்தேக நபர் கைது!

( பு.கஜிந்தன் )

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் கொழும்பு துறையில் உள்ள வீட்டிற்குச் சென்று, கடந்த 2024.11.12 அன்று இரவு வேட்பாளரின் தந்தை மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அதே தினத்தில் மேலும் மூன்று வீடுகளை அடித்து உடைத்துச் சேதப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் ஊடகவியலாளரைக் கடத்த வந்தவர்கள் கைது செய்யப்படவில்லை!

கிளிநொச்சி மண்ணின் சுயாதீன ஊடகவியலாளரைக் கடத்த முயன்றதாகச் சந்தேகிக்கப்படும் இருவரை 24 மணித்தியாலங்கள் கடந்தும் பொலிசார் கைது செய்யவில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகத்தில் பணிபுரியும் முருகையா தமிழ்செல்வன் புதன்கிழமை மாலை (டிசம்பர் 26) தனது கடமையை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, கறுப்பு நிற வாகனத்தில் வந்த இருவர் அவரை கடத்திச் செல்ல முற்பட்டதுடன் முயற்சி தோல்வியடைந்ததையடுத்து



அவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவரின் விபரங்கள் பொலிஸாரிடம் இருப்பதாகப் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தம்மைக் கடத்த வந்த வாகனத்தை ஓட்டிச் சென்றவர் கிளிநொச்சி, பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் என பொலிஸ் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ததாக, தாக்குதலுக்கு உள்ளான கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளர் முருகையா தமிழ்செல்வன் குறிப்பிடுகின்றார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு வந்த குறித்த நபர் தன்னையும், அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரி ஒருவரையும் திட்டியதாக முருகையா தமிழ்செல்வன் சக ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

வீரகேசரி, தினக்குரல், உதயன், தமிழ்வின் உள்ளிட்ட பல தமிழ் ஊடக நிறுவனங்களில் சுயாதீன ஊடகவியலாளர்களாக பணிபுரியும் முருகையா தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருள், மண், மணல் கடத்தல் தொடர்பான செய்திகளை வெளியிட்டு வந்துள்ளார்.

முருகையா தமிழ்ச்செல்வன் தொடர்ந்தும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கேள்விக்குறியாகும் வடக்கு மீனவர் வாழ்வாதாரம்



(பாலமுனை சிறாஜ்)





இலங்கை ஜனாதிபதியின் முதலாவது உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான கடற்றொழிலார் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள் குறித்து நாட்டுக்கு தெளிவான தகவல்கள் வழங்கப்படாமையால், வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு

**புதுடில்லியில் இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மீனவர்கள் பிரச்சினை முக்கியமானது என இரு நாட்டுத் தலைவர்களும் குறிப்பிட்டிருந்தனர்.**

**நீண்டகாலமாக நிலவி வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு இருதரப்பினரும் விரைவாகத் தலையிட ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.**

ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்குமென கவலையடைந்துள்ளனர்.

எனவே தமிழ்நாட்டு முதலமைச்சருடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வை எட்டுவதற்கு வடக்கிலுள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர்.

வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வட மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட வடமராட்சி வடக்கு மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தின் முன்னாள் தலைவர் நா. வர்ணகுலசிங்கம், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவார்களோ என்ற கவலை வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

"ஜனாதிபதி இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகுவோம் என்ற வகையிலான கருத்தை வெளியிட்டு வந்துள்ளார். ஆனால் அங்கு என்ன பேசப்பட்டது, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எவை என்பது குறித்து அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை. எனவே, நாம் என்ன நினைக்கிறோம் என்றால், மனிதாபிமான காரணங்கள் எனக் கூறி அவர்கள் மீண்டும் எங்கள் கடலுக்கு வருவார்களோ என்ற கவலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து ஆளுநரிடம் தெரிவித்துள்ளோம். இது தொடர்பாக அமைச்சரிடம் பேசுவதாக குறிப்பிட்டார்."

புதுடில்லியில் இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மீனவர்கள் பிரச்சினை முக்கியமானது என இரு நாட்டுத் தலைவர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

"மீனவர்கள் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் கையாளப்பட வேண்டும் என்பது குறித்து நாங்கள் கலந்துரையாடினோம்" என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் கூட்டாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தமது எக்ஸ் சமூக வலைதளத்தில், தம்மிடையேயான உரையாடலில், "சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துவது" குறித்தும் பேசப்பட்டதாக பதிவிட்டிருந்தார்.

மேலும் இந்திய பிரதமருடன் கூட்டாக பேசும் போது, பாக்கு நீரிணைப் பகுதியில், சட்டவிரோத மீன்பிடி முறைகள் மூலம் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது என்ற தமது கவலையை வெளிப்படுத்தினார்.

"மீனவர்கள் விடயம் குறித்த ஆறாவது கூட்டம் அண்மையில் முடிவடைந்ததை வரவேற்ற நாங்கள், மீனவர்களின் பிரச்சினையை தீர்பதற்கு கூட்டு அணுகுமுறையின் மூலம் நீடித்திருக்கும் வகையில் அணுக வேண்டும் என்பதையும் கலந்துரையாடினோம். சீர் செய்ய முடியாத வகையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், இரு நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ள இழுவைமடி வலையை பயன்படுத்தப்படுவதை உணர்ந்து, உடனடியாக அந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் என நான் வேண்டுகோள் விடுத்தேன்".

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் அறிவிக்கும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் டிசம்பர் 20ஆம் திகதி நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தென்னிந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

நீண்டகாலமாக நிலவி வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு இரு தரப்பினரும் விரைவாகத் தலையிட ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் உடனான கலந்துரையாடலில் கலந்துகொண்ட வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா மீனவர் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்க மீனவ சமூகம் தயாராகவுள்ளது என்பதை தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு தமிழ் மக்களின் பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டார்.

"எங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு மாவட்டங்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாம் தயவாக கோரிக்கை விடுக்கின்றோம். இந்த மீனவர் பிரச்சினையை சுமூகமாகவும் ஒற்றுமையாகவும் நல்லெண்ணத்துடன் தீர்க்க மீனவர் சமூகம் தயாராக இருக்கின்றது. தமிழக முதலமைச்சருக்கு எழுத்து மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம். பி.ஸ்ரீதரனாக இருக்கலாம் கஜேந்திரகுமார் பொன்னம்பலமாக இருந்தாலும் சரி, ரவிகரனாக இருந்தாலும் சரி, செல்வம் அடைக்கலநாதனாக இருந்தாலும் சரி உங்கள் கடிதத் தலைப்பில் தமிழக முதலமைச்சருக்கு எழுத்து மூலம் மீனவர்களின் பிரச்சினைகளை மாத்திரமன்றி பிரச்சினையை சுமூகமாக தீர்ப்பதற்கு தயார் என்பதை அறிவியுங்கள்."

இந்திய மீனவர்களால் இந்நாட்டில் உள்ள ஐம்பதாயிரம் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தலையிட வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

"வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 50,000 குடும்பங்கள் மற்றும் இரண்டு இலட்சம் மக்களின் நலனுக்காக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு தமிழ்த் தேசிய மட்டத்தில் செயற்படும் கட்சிகள் மற்றும் தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்."

வடக்கு மாகாண ஆளுநருடன் இடம்பெற்ற தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், காணி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் வடக்கு மாகாண மீனவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் ஆளுநருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# நுரைச்சோலை வீடுகள்;

# பயனாளிகளுக்கு விரைவில் வழங்கப்படும் சாத்தியமில்லை





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் பயனாளிகளுக்கு விரைவில் வழங்கப்பட்டும் சாத்தியங்கள் ஏதும் தென்படவில்லை என காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளர் கைறுதீன் நிஹால் அஹமட் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தினர் சார்பாக, சுனாமித் தாக்கம் ஏற்பட்டு 20 வருட நினைவு நாளன்று 26.12.2024 அம்பாறை மாவட்டச் செயலாளரைச் சந்தித்தபோது வீடுகள் விரைவில் பயனாளிகளிடம் வழங்கப்படாது எனும் நிலைமைகளை அறிந்து கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,

சவூதி அரசாங்க நிதியைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வீடுகளை சுனாமியால் பாதிப்புற்றோருக்கு வழங்கக்கோரி அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ் ஆகியோருடன், சுனாமியால் பாதிக்கட்டவர்களை உள்ளடக்கிய காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி சந்திப்பொன்றை நடத்தியது.

சந்திப்பில், அம்பாறை மாவட்ட காணிப் பிரச்சினைகள் உள்டங்கிய ஆவணம், கரும்பு விவசாயிகளின் நிலம் பறிக்கப்பட்டுள்ளமை, அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட விரிவான ஆய்வு ஆவணங்களும் மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

மகஜர் நியாயமானது என தெரிவித்த மாவட்டச் செயலாளர் தனது நிலைப்பாடு தொடர்பில் சந்திக்கச் சென்ற காணியிழந்தோர் குழுவினரிடம் தெளிவுபடுத்தினார்.

"2009ஆம் ஆண்டு சுனாமி நுரைச்சோலை வீட்டுத் திட்ட வீடுகளையும் அதன் உட்கட்டுமானங்களையும் பயனாளிகளுக்கு வழங்க ஆயத்தமானபோது தீகவாவி பௌத்த தேரருடைய தலைமையில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும், அதன்பின்னர் உச்ச நீதிமன்றத்தில் தேரருடைய தலைமையில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் காரணமாகவும் வீட்டுத் திட்டத்தைக் கையளிப்பதில் தொடர்ந்தும் சிக்கல்கள் நிலவுகின்றது.

கடந்த 2024.12.20ஆம் திகதியும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க என்னை அழைத்து இது தொடர்பில் கேட்டறிந்தார்;. வழக்கு தீர்ப்பை மீறி செயற்பட முடியாத நிலை உள்ளதைப்பற்றி கலந்துரையாடப்பட்டன.

சுனாமியால் பாதிப்புற்ற முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டும் என்றே சவூதி அரசு இவ்வீடுகளை நிர்மாணித்துத் தந்தது இப்போதும் தாமதிக்காது அவ்வீடுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குங்கள் என்றே சவுதி அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் 500 வீடுகளை வழங்கவும் நாங்கள் தயாராகவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வழக்குத் தீர்ப்பின்படி காணி பகிர்ந்தளிக்கும் தேசியக் கொள்கை அடிப்படையில் வழங்க கூறப்பட்டுள்ளது. கொள்கைப்படி தேசிய இன விகிதாசாரக் கொள்கைப்படி வழங்கத் தீர்மானித்தால் மிகச் சொற்பமான அளவே பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வீடுகள் கிடைக்க வாய்ப்புள்ளது.ஆனால், அது நியாயமில்லை.

அதன் காரணமாகவே இறுதியாக இவ்வீடுகளை மாவட்ட இன விகிதாசாரத்தின்படி பகிர்ந்தளிக்க நான் சிபார்சு செய்துள்ளேன். ஆயினும் மேலிடத்திலிருந்து அதற்குரிய பதிலேதும் இன்னும் கிடைக்கவில்லை.

வழக்கினை மீண்டும் அழைக்க வேண்டும், அவ்வாறு வழக்காளிகள் மீண்டும் அழைக்கப்படும்போது அவர்களுடைய நிலைப்பாடு தொடர்பிலும் எமக்கு கூறமுடியாதுள்ளது. அவர்களுடன் சுமுகமாகப் பேச முயற்சிகள் ஏதும் எடுக்கப்பட்டதா என்பதையும் பார்க்கவேண்டும். அல்லது இன்னுமொரு மனித உரிமை மீறல் வழக்கினைத் தாக்கல் செய்து நீங்கள் நீதியைக் கோரலாம். யாருக்கும் அநியாயம் நடப்பதில் எனக்கு விருப்பமில்லை" என மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாக காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளர் நிஹால் அஹமட் தெரிவித்தார்.

மேலும், இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தெளிவுகாண வேண்டிய பல கேள்விகள் எமக்கு எழுந்தது. உதாரணமாக, காணி பகிர்ந்தளிப்பதில் தேசியக் கொள்கை என்ன? அது பிரதேசத்தில் எவ்வாறு அமுல்படுத்தப்படும்? வீட்டுப் பிரச்சினை ஏன் காணிப் பிரச்சினையாக மாறியது? வழக்கில் எதிர்த்தரப்பு வாதம் என்னவாக இருந்தது? என்ற விடயங்கள் அலசி ஆராயப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் தன்னார்வமாக செயற்படும் ஆர்வமுள்ள சட்ட வல்லுநர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் அரச அதிகாரிகள் அனைவரும் இணைந்து பாதிப்புற்ற மக்களுக்கு நியாயம் கிடைக்கப் போராட வேண்டியுள்ளது. என்றும் நிஹால் அஹமட் வலியுறுத்தினார்.

# புத்தளம் நகர வெள்ளப் பிரச்சினையை தீர்க்க முன்நகர்வு திட்டம்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் நகரம் எதிர்நோக்கும் வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை முன் வைப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்நகர்வுக் கட்டமாக நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளை தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர செயற்குழுவினர் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறிப்பாக வெள்ள அனர்த்த பாதிப்புக்களை தவிர்க்கும் நடவடிக்கைகள் ஆராயப்பட்டதுடன், எதிர்வரும் பெரு மழை காலத்திற்கு முன்னதான முன் ஆயத்தங்கள் செயற்படுத்த திட்டமிடப்பட்டன.

இதன் போது பொறியியலாளர் என்.கே. நன்சீரினால் வெள்ளம் விரைவாக வழிந்தோடுவதற்காக வரையப்பட்ட புதிய வரைபடம் ஒன்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினரின் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு எதிர்வரும் வாரங்களில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.




புத்தளம் நகரம் மற்றும் பிரதேச சபைகளை மையப்படுத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்துள்ள அபிவிருத்தி திட்ட வரைவு தொடர்பான தெளிவூட்டல்களும், புத்தளம் நகரசபையை மாநகர சபையாக்குவது நோக்கியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் காணி, உட்கட்டமைப்பு, ஏனைய வளங்களை ஒருமுகப்படுத்தி நீரியல் விவசாயம், கைத்தொழில், சுற்றுலாத் துறைசார் பொருளாதார கேந்திரமாகவும், தொழிற்துறை கல்வி, போக்குவரத்து வசதிகள், பொழுது போக்கு மற்றும் விளையாட்டுத்துறை மேம்படுத்தலும் போன்றன இங்கு கலந்துரையாடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் நகர அமைப்பாளர் எம்.ஏ.எம்.ரியாஸ் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமேல் மாகாண பணிப்பாளர் ப்ரியானி, உதவி பணிப்பாளர்கள் மற்றும் புத்தளம் நகர சபை செயலாளர் ப்ரீத்திக்கா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ‘கைவிடப்பட்டுள்ள உப்பளங்கள் விரைவில் புனரமைக்கப்படும்’

ஹம்பாந்தோட்டை நிருபர்

தற்பொழுது உப்பு உற்பத்தி செய்யாமல் கைவிடப்பட்டுள்ள உப்பளங்களை புனருத்தாரணம் செய்து உப்பு உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென ஹம்பாந்தோட்டை உப்புக் கம்பனியின் புதிய தலைவர் டி.நன்தனதிலக தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை உப்புக் கம்பனியின் புதிய தலைவராக ஹம்பாந்தோட்டை உப்புக் கம்பனியின் முன்னாள் சிரேஷ்ட உற்பத்தி முகாமையாளரான டி.நன்தனதிலக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு கடமைகளை பொறுப்பேற்றார்.

உப்புக் கம்பனியின் புதிய தலைவர் டி.நன்தனதிலக பதவியேற்றதன் பின்பு ஊடகவியலாளர்களுக்கு முன்னிலையில் உரையாற்றிய போது தெரிவித்ததாவது நாட்டில் உப்பிற்கு எவ்வித



தட்டுப்பாடும் ஏற்படாது என்று தெரிவித்தார்.

தற்போது எமது கம்பனியிடம் 6000 மெட்ரிக் டொன் கையிருப்பில் உள்ளது. தற்போது நிலவி வரும் சீரான காலநிலை காரணமாக எதிர்வரும் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் உப்பினை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் நாட்டில் உள்ள மக்கள் உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தால் அதிகளவில் உப்பை சேமித்து வருகின்றனர். இதனாலேயே உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று அச்சம் கொள்ள தேவை இல்லை .

கடந்த காலங்களில் உப்புக் கம்பனியில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்கள் சம்மந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். ஹம்பாந்தோட்டை உப்புக் கம்பனியின் ஊழியர் ஒருவர் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்ட முதலாவது நபராக இவர் திகழ்கிறார். உப்பு உற்பத்தி துறையில் நீண்ட கால அனுபவம் வாய்ந்த இவரை தலைவராக நியமித்தமைக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஊழியர்களும் மக்களும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

# திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவ விழா



## 2ஆம் திகதி உட்கொடியேற்றம்

க.மகாதேவன்

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவ விழாவில் உட்கொடியேற்றம் எதிர்வரும் வியாழக்கிழமை (02)காலை 10.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து தேர்த்திருவிழா 10ஆம் தீர்த்த உற்சவம் 11ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

12ஆம் திகதி மாலை 5 மணியளவில் ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் உப்பிலிருந்து ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வரை திருவீதி வலம் வருதல், அத்துடன் அன்று இரவு திருக்கல்யாண உற்சவம், வசந்த மண்டப பூஜை, திருபொன்னுஞ்சல் உற்சவம் என்பன இடம் பெறும்.

13ஆம் திகதி மாலை 6மணிக்கு ஆஞ்சநேயர் பூஜை நடைபெற்று விழா இனிதே நிறைவடையும்.

# ஐயப்பன் சுவாமி ஆலய வருடாந்த பூஜை



க.மகாதேவன்

உடப்பு பாலத்தருகில் அமைந்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தின் அருகில் அமைத்துள்ள ஐயப்பன் சுவாமி ஆலயத்தின் வருடாந்த பூஜையை முன்னிட்டு, ஐயப்பன் திருவூஞ்சல் நிகழ்வு நடைபெற்றது. ஐயப்பனை தரிசிக்கும் மாலை அணிந்த சாமிமார்கள் ஊஞ்சலில் இருக்கும் ஐயப்பனைத் தாலாட்டி வழிபாட்டில் ஈடுபட்டனர். பூஜையில் பக்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவர் கைது

எம்.ரீ.ஆரிப்

நொச்சியாகம கொகுன்னேவ பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோதத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நொச்சியாகம பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம் ரனோராவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவராவர். குறித்த நபரிடமிருந்து இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சி யாகம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விலங்குகளை வேட்டையாட சென்றவர் கைது

எம்.ரி.ஆரிப்

வில்பத்து தேசிய பூங்காவில் வனவிலங்குகளை வேட்டையாடச் சென்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளதாக நொச்சியாகம பொலிசார் தெரிவித்தனர்.

நொச்சியாகம பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிமிருந்து கட்டுத் துப்பாக்கி ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றின் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# குவைத்தின் நிதியுதவியில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம்



எம்.யூ.எம்.சனூன்

குவைத் நாட்டின் நிதி ஒதுக்கீட்டில் குருணாகல் ஹொரம்பாவ ஜாமியா ஜும்ஆ பள்ளிக்கு இலவசமாக நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது குவைத் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நூருல்லா மற்றும் ஜாமியா ஜும்ஆ பள்ளியின் நிர்வாக தலைவர் அஷ்ஷெய்க் ராஜுஸ் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் ஊடகப் பணிப்பாளர் ஊடகவியலாளர் ஏ.டபில்யூ.எம்.பஸ்லான் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டியில் இன்று பரிசளிப்பு விழா

எம்.எச்.எம்.சியாஜ்

கற்பிட்டி விஞ்ஞான பிரிவு வேலைத் திட்டத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான பிரியாவிடை மற்றும் பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை (30) கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கே.எஸ்.பீ அமைப்பின் தலைவரும் கற்பிட்டி கோட்டகல்விக் காரியாலய ஆசிரிய ஆலோசகருமான எம் ஜீ.எம் ஹிஸான் தலைமையில் நடைபெற உள்ளது

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் கே எஸ்.பீ இன் பாட விரிவுரையாளர் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# அரச ஹஜ் குழுவின் உறுப்பினராக ஹக்

புதிய ஆண்டுக்கான புனித ஹஜ் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான அரச ஹஜ் குழுவின் உறுப்பினராக எம்.எஸ்.எப்.ஹக் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவருக்கான நியமனக்கடிதம் புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவியினால் வழங்கப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்டத்தின் திக்வெல்லயினை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கணக்கீட்டுபட்டதாரியாவார்.

றியாஸ் மிஹுலர் தலைமையிலான புதிய அரச ஹஜ் குழுவின் உறுப்பினர்களாக விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம். நவவி, சிரேஷ்ட சட்டத்தரணி டி.கே.அசூர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுல்லா முகாமைத்துவ பேராசிரியர் எம்.எஸ்.எம். அஸ்லம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.




மஹாஇலுப்பல்லம் விவசாய ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு விவசாய கால்நடை காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால்காந்த சனிக்கிழமை(28) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகளை கண்காணிப்பதைப் படங்களில் காணலாம். படங்கள் : எம்.ரீ.ஆரிப்

# கற்பிட்டியில் வலுவூட்டல் தொடர்பான செயலமர்வு



எம்.எச்.எம்.சியாஜ்

கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடன் இணைந்து கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி பிரிவினால் இணங்காணப்பட்ட கற்பிட்டி பிரதேசத்தில் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக காணப்படுகின்ற இளம் வயது திருமணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளை குறைப்பதற்காக எதிர்காலத்திற்கான வலுவூட்டல் என்ற தொனிப்பொருளில் சிறந்த வாழ்க்கைக்கான நுட்பங்களை கற்றல் தொடர்பான செயலமர்வு ஒன்று வேல்ட் விசன் லங்கா நிறுவனத்தின் கிரேஸ் செயல்திட்டதின் அனுசரனையூடாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் உதவி பிரதேச செயலாளர் சந்தியா பிரியதர்சினி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகல்வின் வளவாளராக கற்பிட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரும் செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத் தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஏ.ஆர்.முனாஸ் கலந்து கெண்டதுடன் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்திலதா, கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் வேல்ட் விசன் லங்கா நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவயது திருமணங்களை இல்லாதொழிப்போம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறு வயதுத் திருமணங்களைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி ஹரிஹரதாமோதரன் தெரிவித்தார்.

"மாண்புடன் கூடியதாக மாதவிடாய் செயற்பாட்டை நிலைநிறுத்துவதற்கு பாலியல் உற்பத்தி சுகாதார உரிமைகளே அடிப்படை" எனும் இவ்வாண்டிற்கான சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக தொடர்சியாக அமைந்த நிகழ்வுகள் மட்டக்களப்பு கல்லடி இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜ/லேகா கலந்து கொண்டார்.

அங்கு, மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி எல். பிரசாந்தி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சிறுவர் மகளிர் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், உளவத் துணையாளர்கள், பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஆகியோர் மத்தியில் திட்டத்தின் நோக்கம்



பற்றி விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி தெளிவுபடுத்தினார்.

"பெண் பிள்ளைகளையும் பெண்களையும் கண்ணியப்படுத்தும் விழிப்புணர்வை ஊட்டுவதான இந்தத் திட்டம் முதலில் பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பமாகும்.

பின்னர் அது அலுவலகங்கள், பணியிடங்கள், வேலைத் தலங்கள், கிராமப் புறங்கள் என்று வியாபித்துச் செல்லும். பெண் பிள்ளைகளையும் பெண்களையும் கண்ணியப்படுத்த மாதவிடாய்க் கருத்தியலை உள்வாங்கச் செய்து அதன் தாற்பரியங்களை விழிப்புணர்வூட்டுவதே இதன் நோக்கமாகும்.

இதன் மூலம் இளவயதுத் திருமணங்கள் இடம்பெறுவதை இல்லாதொழிப்பதோடு பெண்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான பாரபட்சங்களையும் ஓரங்கட்டலையும் முடிவுக்குக் கொண்டு வர முடியும். அதன் மூலம் சமூக நெறிபிறழ்வுகளையும் சமூகச் சீரழிவுகளையும் தடுக்க முடியும் அதற்காகவே இந்த "மாண்புடன் கூடிய மாதவிடாய் எண்ணக்கருவினை பரவலாக்கும் திட்டம் அமுலாகிறது" என்றார். நிகழ்வில் பாடசாலைச் சிறுமிகள், பெண் பிள்ளைகள், தொழில் புரியும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், சமூகப் பிற்போக்குவாதக் கருத்தியல்களால் பெண்கள் முகங்கொடுக்கும் சவால்கள், பாரபட்சங்கள், ஓரங்கட்டுதல்கள், பாதிப்புக்கள் பற்றிய கருத்துக்கள் பங்குபற்றியோரால் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்நிகழ்வில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தின் நிருவாக அலுவலர் கே. நிர்மலா, திட்ட உத்தியோகத்தர் புண்ணியமூர்த்தி ஜீவிதா, சமூக ஒருங்கிணைப்பாளர்களான பி. முரளீதரன், கே. சிந்துஜா, கே.லக்ஷானா, கே. துதர்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை சாஹிராவிற்கு பஸ் கொள்வனவுக்கு நிதி




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டினை முன்னிட்டு பாடசாலைக்கு பஸ் வண்டி ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக கல்முனை சாஹிரா பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான ஸஹிரியன்ஸ் லயன்ஸ் 2003 - 2006 பிரிவினர் பாடசாலைக்கு எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (850,000) ரூபா பெறுமதியான காசோலையினை நேற்று முன்தினம் சனிக்கிழமை (28) பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிரிடம் கையளித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் முகமாக பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் அது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப்பட்டு இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் பாடசாலைக்கு பஸ் வண்டி ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக இத் தொகையினை வழங்கிய 2003 - 2006 ஸஹ்ரியன்ஸ் லயன்ஸ் பிரிவினருக்கு பாடசாலையின் சமூகம் சார்பாக அதிபர் இதன் போது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, அவர்களுக்கு சான்றிதழ் வழங்கியும் கௌரவித்தார்.

இதுபோன்று இப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மற்றும் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் தங்களால் முடியுமான பங்களிப்பினை வழங்கி, வெகு விரைவில் இப்பாடசாலைக்கு ஒரு பஸ் வண்டியினைப் பெற்றுக்கொள்ள தங்களால் முடியுமான உதவிகளைச் செய்ய முடியும் என்றும் தனது உரையின்போது அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்.எம்.றிஸ்மிர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவிச் செயலாளர் எம்.ஐ.எம். றியாஸ் உட்பட பிரதி, உதவி அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அகரம் பாலரின் பரிசளிப்பு விழா



மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு அகரம் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா அகரம் பாலர் பாடசாலையின் தலைவர் செ.துஜியந்தன் தலைமையில் நடைபெற்றது. அம்பாறை திருக்கோவில் சீரடி சாய் கருணாலயத்தின் ஸ்தாபகர் நோர்வேயில் வசிக்கும் சீதா விவேக் நிதி அனுசரணையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர் க.கோமகராசா கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு தொழில்நுட்ப கல்லூரியின் அதிபர் மா.சோமசூரியம், சமுகசேவை உத்தியோ கத்தர் க.கமலராஜன், கிராமசேவையாளர் செ.டிலக்ஷன், ஆசிரியர் இ.வரதராஜன், சமூக செயற்பாட்டாளர்களான இளங்கீரன், கிருபேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். அகரம் பாலர் பாடசாலையில் கல்வி கற்று தரம் ஒன்றுக்கு செல்லும் மாணவர்கள் மங்கள வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதுடன் அவர்களினால் பாடல், நடனம், அபிநயம், கதைகூறல், கவிதை போன்ற ஆற்றுகைகள் அரங்கேற்றப்பட்டன. இம்முறை அகரம் பாலர் பாடசாலையில் இருந்து 27 மாணவர்கள் தரம் ஒன்றுக்கு செல்வதுடன் அவர்களுக்கான பரிசுகளும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குழந்தை மொழி



(ஆரையம்பதி நிருபர்)

மட்டக்களப்பு சிடாஸ் கனடா அமைப்பினால் மட்டக்களப்பு வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குழந்தை மொழி எனும் நூல் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வு கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிதர்சினி மகேந்திரகுமார் தலைமையில் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வினை முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு அபிவிருத்திக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுரேகா விவேகானந்தன் ஒழுங்கமைத்திருந்தார். மேலும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு சிடாஸ் அமைப்பின் உறுப்பினர்களான திரு. முத்துராஜா புவிராஜா மற்றும் கந்தையா ரவிச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குழந்தை மொழி புத்தகங்களையும் வழங்கி வைத்தனர்.

# சாரணர் தகைமைசார் திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சி

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று அந்நூர் சமூக கலாசார அபிவிருத்தி மையம் , இலங்கை சாரணர் சம்மேளனத்தின் அக்கரைப்பற்று - கல்முனை மாவட்டக் கிளையுடன் இணைந்து தரம் 6- 9 வரை கற்கும் மாணவர்களுக்கும் அந்நூர் கலாசாரமையத்தில் விழுமியக்கல்வியைத் தொடரும் மாணவர்களுக் குமான சாரணர் தகைமைசார் திறன்களை விருத்தி செய்வதற்கான பயிற்சி அக்கரைப்பற்று கடற்கரை பள்ளிவாசல் முன்றல் மைதானத்தில் அக்கரைப்பற்று கலாசார மையத்தின் கடற்கரை வளாகத்தில் ஆரம்பித்து வைத்தது.

அந்நூர் கலாசார மையத்தின் விழுமியகல்வி திட்ட இணைப்பாளர் எம்.ஏ. ஜனூஸ் தலைமையில் நடைபெற்ற பயிற்சி ஆரம்ப வைபவத்தில் இலங்கை சாரணர் சம்மேளனத்தின் அக்கரைப்பற்று - கல்முனை மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை, சாரணர் பயிற்சியாளர் ஐ.எல்.முகம்மது பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டு சாரணியம் தொடர்பான கோட்பாடுகளையும் விளக்கவுரைகளையும் விரிவாக விளக்கியதோடு பல்வேறு பயிற்சிகளையும் வழங்கினர்.



இப்பயிற்சியில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அந்நூர் கலாசார மையம் கடந்த இரண்டு வருடங்களாக மாணவர்களின் தலைமைத்துவத்திறன் மற்றும் நுண் திறன்களின் கொள்ளவை விருத்தி செய்வதற்காக விளுமியக்கல்வித்திட்டத்தை ஆவுஏ (Moving to Values) எனும் பெயரில் நடாத்திவருகிறது.

இம்மாணவர்களுக்கு பௌதீக மற்றும் ஆத்மீக குணநலன்களை விருத்தி செய்யும் நோக்கில் தலைமைத்துவம்,குழுச் செயற்பாடு, நேர முகாமைத் துவம்,கற்றலுக்கான கற்றல்,குழு மையக்கற்றல், நீச்சல், ஆக்கத் திறன்,ஆத்மீகம் , சேர்ந்து வழக்கற்றல், பயிற்ச்சிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் நிகழ்வு




(எம்.என்.எம்.புஹாரி)

திருகோணமலை பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்றமானது அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது மாணவர்களது தனித் திறன்கள் வில்லுப்பாட்டு, கதை, கவிதை, பாட்டு நாடகம் என இயல் இசை நாடகம் ஆகிய செயற்பாடுகள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக social development foundation நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் குணபாலன் நிரோஷன், திருகோணமலை சமூக செயற்பாட்டாளர் இணையத்தின் செயலாளர் திரு.கஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். அறிவு ஒளி மையத்தின் நிறுவனர் உதயகுமார் அஜித் குமார், விவேகானந்தா மீனவர் சங்கத் தலைவர் கீராலன், மகளிர் சங்கத் தலைவி கலாரூபன் தர்சினி, அறநெறிப் பாடசாலை ஆசிரியர் இளங்கோவன் ஜெயவதணி, அறிவு ஒளி மையத்தின் நிர்வாகச் செயலாளர் புகழ் வேந்தன் டிலக்ஷிகா ஆகியோர் பங்கு பெற்றிருந்தனர்.

# அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தின் திட்டமிடல் நிகழ்வு

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று ஸகாத் நிதியம் மற்றும் பைத்துல்மால் நிறுவனத்தின் 2025ஆம் ஆண்டிற்கான எதிர்கால திட்டமிடல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நிகழ்வு அக்கரைப்பற்று மென்கோ கார்டனில் நிதியத்தின் உபதலைவர் அஷ்ஷேக். அபுல் ஹாசீம் (அஷ்ஹரி) தலைமையில் நடைபெற்றது.

இதில், 2025ஆம் வருடத்தில் நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை எவ்வாறு கொண்டு செல்வது? எவ்வாறான திட்டமிடல்களோடு செய்வது? வெளிநாடுகளில் உள்ள எமது ஊர் சகோதரர்களுக்கும் ஸகாத் நிதியத்திற்கும் இடையிலான உறவை வளர்த்து கொள்வதன் அவசியம் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை நிதியத்தின் செயலாளர் எம்.ஐ.சாஹீர் (இஸ்லாஹி) அங்கத்தவர்கள் மத்தியில் தெளிவுபடுத்தினார்.

அக்கரைப்பற்று பைத்துல்மால் இதுவரை காலமும் இப்பிராந்தியம் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதும் செய்த பணிகளையும், இதற்காக தங்களது நேர காலங்களை ஒதுங்கி பணி செய்யும் அங்கத்தவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, குறிப்பாக நிதியத்தின் பங்காளர்களாக இருக்கும் இப்பிராந்திய பொதுமக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக நிதியத்தின் தலைவர் அஷ்ஷேக். ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் (நழீமி) தெரிவித்தார்.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு

(ஜௌபர் ஏ கரீம்)

இறக்காமம் பிரதேச சபைக்கு உட்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் (27) நடைபெற்றது. இறக்காமம் பிரதேச சபை செயலாளர் எம். ஐ. எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள ரத்னநாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இதன்போது தாய்-சேய் நலன் பேணல், மாற்றுத்திறனாளிகளுக்கான நன்கொடை, விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவியா ஆணையாளர் கமல் நெத்மினி, இறக்காமம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம். எம். எஃப். ரஸ்கா ஆஸ்மி இறக்காமம் பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பி.மௌலானா உள்ளிட்ட மற்றும் பல அரசியல் முக்கியஸ்தர் களும் கலந்து சிறப்பித்தனர்.

## இந்திய மீனவர் அத்துமீறல்:
# 2016 ஆம் ஆண்டின் தீர்வு போதுமானது

### வர்ணகுலசிங்கம் சுட்டிக்காட்டு

▪ பு.கஜிந்தன்

இலங்கை – இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இரு நாட்டு மீனவர்கள் பேசி 2016 ஆம் ஆண்டு ஒரு தீர்வு எட்டப்பட்டுள்ளதாகவும், அந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தினாலே இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையிலிருந்து இந்தியத் தமிழகம் சென்றுள்ள இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது, இந்திய- இலங்கை மீனவர்களில் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று வடமராட்சியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அருச்சுனா யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர் பிரதிநிதிகள் என்று சிலரைச் சந்தித்ததாகவும், அவர்கள் அனைவரும் உண்மையான மீனவர்கள் இல்லை என்றும்




அவர்கள் கடந்த அரசு காலத்தில் ஆளும் கட்சியினரால் தமக்கு வேண்டியவர்களையும், தமது கட்சி உறுப்பினர்களையுமே அப் பதவிகளுக்கு நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மாத்தளை ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை -ICU பிரிவுகள் மூடும் நிலை

### வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

▪ எம்.எஸ்.எம். மஸாஹிம்

மாத்தளை ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் ICU பிரிவுகளை முற்றாக மூடும் நிலை உருவாகியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

மாத்தளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே வைத்தியசாலை பணிப்பாளர் பிரசன்ன பெர்னாண்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மாத்தளை மாநகர சபையின் மூலம் அன்றாடம் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் காணியில் கொட்டப்படுவதால் சகிக்க முடியாத துர்நாற்றம் மற்றும் ஈ – நுளம்புகளால் வைத்தியசாலை பணிகளைத் தொடர முடியாததுள்ளதோடு சத்திர சிகிச்சை மற்றும் ICU பிரிவுக்குள் ஈக்கள்-நுளம்புகள் நுழைவதால் சிகிச்சைகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

அத்தோடு நோயாளர்களுக்குக் கிருமிகள் தொற்று ஏற்பட வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை நீடிக்குமானால் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் உயிர்களுக்குக் கூட ஆபத்துகள் ஏற்படக்கூடிய அபாய நிலைகள் இருப்பதால் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

# குதிரை தாக்கியதில் சிறுவன் காயம்

▪ டி.சந்ரு, செ.திவாகரன்

நுவரெலியா கிரகரி வாவிக்கரையோரத்தில் (28) சனிக்கிழமை மாலை மட்டக்குதிரை ஒன்று தாக்கியதால் நெஞ்சு பகுதியில் ஏற்பட்ட காயத்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது வருட இறுதி என்பதால் தினமும் ஆயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் நுவரெலியாவிற்கு வந்து செல்கின்றனர். அவ்வாறு கிரகரி வாவி கரையோர வீதியில் நடந்து சென்ற போது சவாரிக்காகக் கொண்டு செல்லப்பட்ட மட்டக்குதிரை ஒன்று திடீரென சிறுவனைத் தாக்கி காயப்படுத்தியதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அதன் பின்னர் குறித்த பகுதியில் பாதுகாப்பு கடமையிலிருந்த நுவரெலியா பொலிஸ் நிலைய உத்தியோகஸ்தர்களிடம் முறைப்பாடு செய்து சிறுவனைத் தாக்கிய மட்டக்குதிரையின் உரிமையாளர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியாவில் சுற்றித் திரியும் மட்டக்குதிரைகள் பிரதான வீதிகளில் சுற்றுலாப் பயணிகளை





உதைப்பதும், கடிப்பதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது இதன் காரணமாக நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர் .

எனவே வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளை அப்புறப்படுத்தச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் தெரிவிக்கப்படுகிறது.

# தனியார் பஸ் சாரதி பணி இடைநிறுத்தம்

▪ பு.கஜிந்தன்

தனியார் பஸ்ஸை மறித்து அதன் சாரதியைத் தாக்கிய குற்றச்சாட்டில் மற்றொரு தனியார் பஸ் சாரதிக்கு ஒரு மாத காலம் தற்காலிக பணி இடைநிறுத்தம் வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறிப்பிட்ட சாரதி பயணித்த பஸ்ஸின் உரிமையாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் – யாழ்ப்பாணம் பாதையில் கடந்த 5ஆம் திகதி பயணித்த தனியார் பஸ்ஸை வழிமறித்து நிறுத்தி, அந்த பஸ்ஸின் சாரதியை இருக்கையில் வைத்துத் தாக்கி அச்சுறுத்தியதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளமையையடுத்து மேற்படி தாக்குதலை நடத்திய சாரதிக்கு முன்னெச்சரிக்கை தண்டனையாக நேற்று முன்தினம் முதல் ஒரு மாத காலத்துக்குத் தற்காலிக பணி இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சாரதிக்கு எதிராக மீண்டும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அவர் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படாது என்பதுடன் பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

# கெப்டன் விஜயகாந்தின் ஓராண்டு நினைவேந்தல்








▪ பு.கஜிந்தன்

தென்னிந்திய முன்னணி நடிகரும், அரசியல் வாதியுமான மறைந்த கேப்டன் விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் நெல்லியடியில் நினைவுகூரப்பட்டது.

நிகழ்வில் மறைந்த கேப்டன் விஜயகாந்தின் உருவப் படத்திற்கான மலர் மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, ஆத்மாசாந்தி பிரார்த்தனையும் இடம்பெற்று, மதியபோசனமும் வழங்கப்பட்டது.

# விலை நிர்ணயம்: மாபியாக்களின் கைகளை ஓங்கச்செய்கிறது

### வியாபார மாஃபியா என்கிறார் இளங்குமரன் எம்.பி



▪ பு.கஜிந்தன்

விலை நிர்ணயம் எல்லை மீறி, தனியார் கைகளுக்குச் செல்கின்றது. இதுவரை இருந்த அரசியல்வாதிகள் அதனைத் தனியார் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் அதனை வியாபார மாஃபியா என்றுதான் கூற வேண்டும்.

அதனால் தான் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் பலமாக இருந்தால், விலை நிர்ணயம் என்பது கூட்டுறவுச் சங்கத்தால் தான் தீர்மானிக்கப்படும் என்று திடமான நம்பிக்கை எமது அரசாங்கத்துக்கு உண்டு எனத் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று நடைபெற்ற கற்றால் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டுறவுச் சங்கம் முன்னைய காலத்தில் எவ்வாறு இருந்தது, இப்போது எவ்வாறு இருக்கிறது எனச் சிந்திக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையில் சென்றுகொண்டு இருக்கின்றது. கூட்டுறவுத் துறையைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்கு உள்ளது.

விலைகள் அதிகரிக்கும் போதும், பொருட்களுக்குத் தட்டுப்பாடு காணப்படும் போதும் கூட்டுறவுச் சங்கங்கள் பலமாக இருந்தால் அனைத்து சேவைகளும் சிறப்பாக அமையும். சங்கானையில் உள்ள 35 கிளைகளில் இன்று 8 தான் இயங்குகின்றன. ஏனெனில் மக்கள் அருகில் உள்ள கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்கள். வியாபாரம் என்பது அரசியல் மாஃபியாவிடம் சிக்கி, வியாபாரம் அரசியல் பின்னூட்டலில் நடைபெறுகிறது.

அரசியல்வாதிகள் மாறியுள்ளார்கள் ஆனால் அந்த சிஸ்டர் (முறைமை) மாறவில்லை. இதுதான் நியதி. ஆனால் அரசியல்வாதிகளுக்கும் மாஃபியாக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இனிமேல் எங்களது பெயரைப் பாவித்தோ செல்வாக்கைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் நாங்கள் கட்டமைப்புக்கு ஊடாக இயங்க ஆசைப்படுகிறோம் என்றார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை வந்த பெண் மரணம்

சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற பெண் ஒருவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஞாயிற்றுக்கிழமை(29) உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த ரேணுகா தமயந்தி (57) வயதுடைய பெண்ணே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் நல்லதண்ணியா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ரோயல் பீஸ் மகளிர் பரிசளிப்பு விழா

▪ எம்.ஏ. அமீனுல்லா

கண்டியில் இயங்கிவரும் ரோயல் பீஸ் மகளிர் அமைப்பு (Royal Bees Ladies Organization) வினது 7 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா திகன, ரஜவெல்ல , சனச கேட்போர் கூட மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் 114 மாணவர்களுக்கு சுமார் ஒரு வருடத்திற்கு போதுமான பாடசாலை அப்பியாச கொப்பிகள் மற்றும் பாடநூல்கள், உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.








# சொத்துத் தகறாரால் பொதியில் வந்த உடல்



ஆந்திராவில், ஒருவரின் வீட்டுக்கு சில நாட்களுக்கு முன் மரப்பெட்டியில் வந்த பொதியொன்றில், சடல மொன்று மீட்கப்பட்ட நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இதுகுறித்து அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளனர். அதாவது, மாமனாரை மிரட்டி சொத்தை அபகரிக்க நினைத்த மருமகன், நபர் ஒருவரை கொலை செய்து, பார்சலில் அனுப்பியமை விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில், ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டம், எண்டகண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் 60 வயதான ரங்கராஜன். இவர், தன் மனைவி மற்றும் மூத்த மகளுடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், இவரது வீட்டிற்கு, மரப்பெட்டி பொதி ஒன்று, கடந்த 19ஆம் திகதி வந்துள்ளது. அதைத் திறந்து பார்த்த போது, சடலம் ஒன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் கடிதம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

அதில், ஒரு கோடி ரூபாய் தரவில்லை என்றால், இந்த நபரை கொன்றது நீங்கள் தான் என கூறுவோம் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள், இதுகுறித்து பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸாரின் தீவிர விசாரணையில், ரங்கராஜின் சொத்துக்கு ஆசைப்பட்டு, அவரது இளைய மகளுடன் சேர்ந்து, மருமகன் இந்த சதித்திட்டம் தீட்டியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து ரங்கராஜின் இளைய மகள், அவரது கணவர், இருவருக்கும் உதவிய பெண்ணொருவர் என மூன்று பேரை பொலிஸார் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர்.

# மருத்துவ கழிவுகள் விவகாரத்தால் ஒப்பந்த நிறுவனத்திற்கு 3 ஆண்டுகள் தடை

தமிழகத்தில் மருத்துவ கழிவுகளை கொட்டிய ஒப்பந்த நிறுவனத்தை கறுப்பு பட்டியலில் சேர்த்ததுடன் அந்நிறுவனத்துக்கு 3 ஆண்டுகள் தடை விதித்து கேரள சுகாதார துறை உத்தரவிட்டுள்ளது.

கேரளாவில் இருந்து மருத்துவ கழிவுகளை தமிழகத்தில் கொண்டு வந்து கொட்டுவது வாடிக்கையாகி வருகிறது. அந்த வகையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கேரள மருத்துவ கழிவுகளை நெல்லையில் 6 இடங்களில் கொட்டப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து மருத்துவ கழிவுகளை கேரள மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அகற்ற வேண்டும் என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. அதன்படி, கேரள மாசு கட்டுப்பாட்டு வாரியம் திருநெல்வேலியில் கொட்டப்பட்ட மருத்துவ கழிவுகளை அகற்றியது.

மேலும் இது தொடர்பாக அரசுக்கு கேரள நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. மருத்துவ கழிவுகளை கையாள்வதில் கேரள அரசு தோல்வி அடைந்து விட்டதாகவும், அரசின் நிர்வாக தோல்வியை இது காட்டுவதாகவும் தெரிவித்தது. மேலும் தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக கொட்டப்படும் மருத்துவக்கழிவுகள் குறித்த விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேரள அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே திருவனந்தபுரம் மாநகராட்சியின் அங்கீகாரம் பெற்று ஒப்பந்தம் எடுத்துள்ள சன்ஏஜ் எகோ சிஸ்டம் என்ற நிறுவனம் தான் கேரள கழிவுகளை தமிழகத்தில் கொட்டி வந்தது தெரியவந்தது.

இந்நிலையில் கேரளாவில் இருந்து மருத்துவ கழிவுகளை அகற்ற குத்தகை எடுத்த குறித்த நிறுவனத்தை கறுப்பு பட்டியலில் சேர்த்ததுடன், அந்த நிறுவனத்திற்கு 3 ஆண்டுகள் தடை விதித்து கேரள சுகாதாரதுறை உத்தரவிட்டுள்ளது. மேலும் சட்டவிரோத செயல்களால் அரசுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பையும் அந்நிறுவனமே ஏற்க ஆணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "தொன்மையான மொழி தமிழ்"

## இந்திய பிரதமர் மோடி



"உலகிலேயே மிகவும் பழைமையான மொழி தமிழ் என்பதில், ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, பிரபல இந்திய வானொலியில் 'மான் கி பாத்' எனும் நிகழ்ச்சி மூலம், நாட்டுமக்களுக்குடன் உரையாற்றி வருகின்றார். இந்த நிகழ்ச்சியானது, ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிபரப்பாகின்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே, பிரதமர் மோடி, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் தெரிவிக்கையில், "உலகிலேயே தொன்மையான மொழி தமிழ். இது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை. உலக நாடுகளில் தமிழ் மொழியை கற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மாத இறுதியில் பிஜியில் இந்திய அரசின் ஆதரவுடன் தமிழ் கற்பித்தல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 80 ஆண்டுகளில், இதுவே முதல் முறை" என்று குறிப்பிட்டார்.

### விஷவாயு கசிந்ததால் தொழிலாளர்கள் மூச்சுத் திணறி உயிரிழப்பு



குஜராத் மாநிலம், பரூச்சில் இரசாயன தொழிற்சாலையில் விஷவாயு கசிந்ததால், 4 தொழிலாளர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

பரூச் மாவட்டம், தாஹேஜில் உள்ள ஜிஎஃப்எல் தொழிற்சாலையில் வால்வு ஒன்றில் பழுது ஏற்பட்டு விஷவாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இதற்கடுத்து, விஷவாயுவை சுவாசித்த தொழிலாளர்கள் 4 பேர் மயங்கி விழுந்ததையடுத்து, அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் நான்கு பேரும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

# ஆழ்கடலில் இருந்து அவசர செய்தி அனுப்பலாம்

ராமநாதபுரம் மாவட்டம், தொண்டிலாஞ்சியடி மீனவ கிராம விசைப்படகுகளில், மீன்பிடி தொழிலின் போது தகவல்களை உடனடியாக பரிமாறிக்கொள்ளும் வகையில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ உருவாக்கிய, 'டிரான்ஸ்பொண்டர்' கருவி பொருத்தும் பணி வெற்றிகரமாக நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில், மீன்பிடி விசைப்படகுகளில் பொருத்த, மேம்படுத்தப்பட்ட டிரான்ஸ்பொண்டர்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ உருவாக்கி உள்ளது. நிலப்பரப்பிலிருந்து இந்த டிரான்ஸ்பொண்டர்களால்




படகுகளுடன் இருவழி செய்தி பரிமாற்றம் மேற்கொள்ளலாம். குறிப்பாக, 'புளூ டூத்' வாயிலாகவும் இணைத்து, கையடக்கத் தொலைபேசி வாயிலாகவும், தகவல்களை பரிமாறிக்கொள்ள முடியுமாம்.

மேலும், டிரான்ஸ்பொண்டர்களை மீன்பிடி விசைப்படகில் பொருத்துவதால், புயல், சூறாவளி மற்றும் பெருமழை போன்ற ஆபத்தில் மீன்பிடி படகுகள் இருக்கும் போது, ஆழ்கடலில் இருந்து படகின் உரிமையாளருக்கும், மீன்வளத்துறையின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்கும் அவசர செய்தி அனுப்ப இயலும்.

அதேபோல், கரையிலுள்ள மீன்வளத்துறை, பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் படகு உரிமையாளர்கள் அவசர செய்தியை பெறவோ, பகிரவோ முடியும். அது மட்டுமின்றி, அதிக மீன் கிடைக்கும் இடங்கள், காலநிலை, வானிலை நிலவரம் ஆகியவை குறித்தும் படகிற்கு செய்தி அனுப்ப இயலும்.

தவிர, ஆழ்கடலில் படகு நிலைகொண்டுள்ள இடத்தை துல்லியமாக கண்டறிந்து, ஆபத்து காலங்களில் உடனுக்குடன் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் பரிதாப பலி




மத்தியப் பிரதேச மாநிலம் குணா மாவட்டத்தில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த 10 வயது சிறுவன், 18 மணி நேர நீண்ட போராட்டத்திற்கு பிறகு மீட்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தான்.

நேற்று முன்தினம் சனிக் கிழமையன்று, குறித்த சிறுவன், இந்த கிணற்றுக்கு அருகே விளை யாடிக் கொண்டிருந்த போது, அதில் தவறி விழுந்துள்ளான். தகவலறிந்து பெற்றோர் பதறி போய், சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட நிலையில், எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில், சம்பவ இடத்திற்கு, விரைந்த மீட்பு படையினர் மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

18 மணி நேரமாக, மீட்பு படையினர் போராடிய நிலையில், நேற்று (29) காலை 9.30 மணி அளவில் சிறுவன் மீடகப்பட்டு, தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டான். இருப்பினும், சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளான்.

ஏற்கனவே, ராஜஸ்தான் மாநிலத்தில் 700 அடி ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 3 வயது சிறுமியை மீட்கும் முயற்சி ஏழு நாட்களாகத் தொடர்ந்து வரும் நிலையில், மீண்டும் மத்திய பிரதேசத்தில் இது போன்ற நிகழ்வு நடந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கடலில் 64 நாட்கள் தத்தளித்தவரை பத்திரமாக மீட்ட மீனவர்கள்



கடலில் 64 நாட்களாக தத்தளித்தவரை, காசிமேட்டைச் சேர்ந்த மீனவர்கள் பத்திரமாக மீட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்திலிருந்து விஜேனாத் என்பவருக்கு சொந்தமான படகில் 7 மீனவர்கள் அதிகாலையில் மீன்பிடிக்க சென்றுள்ளனர். ஆழ்கடல் பகுதிக்கு மீனவர்கள் சென்றபோது, அங்கே மூங்கிலால் ஆன படகு ஒன்று மிதந்து வந்துள்ளது. அதில் ஒருவர் கையை காட்டி கொடியசைத்துள்ளார்.

உடனே விசைப்படகு ஓட்டுனர் அருகில் சென்று பார்த்தபோது கையெடுத்து கும்பிட்டு காப்பாற்றுமாறும், தான் 64 நாட்கள் கடலில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடனே மீனவர்கள் அவரை மீட்டு காசிமேடு துறைமுகத்திற்கு அழைத்து வந்ததையடுத்து, அவர்கள் அவரை காசிமேடு துறைமுகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். பின்னர் விசாரணையில் அவர் மியான்மார் நாட்டைச் சேர்ந்தவர் என தெரியவந்தது. இதைத் தொடர்ந்து பொலிஸார் கடலோர காவல்படையினரிடம் அவரை ஒப்படைத்தனர்.

# மகா கும்பமேளாவில் 5 இலட்சம் பேருக்கு இலவச கண் சிகிச்சை

உத்தர பிரதேச மகா கும்பமேளாவில் 5 இலட்சம் பேருக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. இதற்காக நாடு முழுவதிலும் உள்ள பிரபல 240 கண் மருத்துவமனைகளுடன் மாநில அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் அடுத்த ஆண்டு ஜனவரி 13ம் திகதி மகா கும்பமேளா ஆரம்பிக்கின்றது. இதில் முதல் முறையாக பல உலக சாதனைகளை படைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இந்த வகையில், மகா கும்பமேளாவுக்கு வருபவர்களில் சுமார் 5 இலட்சம் பேருக்கு இலவச கண் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. அப்போது கண் அறுவை சிகிச்சை தேவைப்படுவோருக்கும் அதை இலவசமாகவே அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஜனவரி 5ம் திகதி "நேத்ரா கும்ப் (கண் கும்ப்)" எனும் பெயரில் திரிவேணி சங்கமத்தில் இதற்கான முகாம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதன் நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் ரஞ்சன் வாஜ்பாய், "கடந்த ஆண்டு கும்பமேளாவை விட இந்த மகா கும்பமேளாவில் 2 மடங்கிற்கும் அதிக எண்ணிக்கையில் இலவச சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. மூன்று இலட்சம் பேருக்கு இலவச மூக்கு கண்ணாடியும் அளிக்கப்படவுள்ளது. இதற்கான மருத்துவ முகாம் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படுகிறது. 140 மருத்துவர்கள் பணியாற்றும் முகாமில் தினமும் சுமார் 10,000 பேருக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்படும்" என தெரிவித்தார்.

ஒரே இடத்தில் பெரும் எண்ணிக்கையில் சர்வதேச அளவில் இலவச கண் சிகிச்சை நடைபெற்றதற்காக கின்னஸ் சாதனை பதிவு செய்ய உத்தர பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.

# மருத்துவமனையில் வெடிகுண்டு புரளி நோயாளிகள் பதற்றம்




கடலூரில் தனியார் மருத்துவமனையில் வெடிகுண்டு இருப்பதாக வந்த அழைப்பையடுத்து அங்கு பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில், கடலூர் முதுநகர் அருகே தனியார் பல்நோக்கு மருத்துவமனையில், வெடிகுண்டு இருப்பதாக தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. உடனடியாக திருப்பாதிரிப் புலியூர் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது. தகவலறிந்து விரைந்து சென்ற பொலிஸார் இது தொடர்பில், விசாரணை நடத்தினர்.

மேலும் மோப்பநாய் உதவியுடன், வெடிகுண்டு சோதனை இடம்பெற்றதைத் தொடர்ந்து, குறித்த தகவல், வெறும் புரளி என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், நோயாளிகள் பதற்றமடைந்ததால், குறித்த மருத்துவமனையில் நீண்ட நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# அமெரிக்காவின் ஏவுகணை தடுப்பு அமைப்பை பயன்படுத்திய இஸ்ரேல்



அமெரிக்காவின் அதிநவீன ஏவுகணை தடுப்பு அமைப்பை இஸ்ரேல் முதல் முறையாக பயன்படுத்தியுள்ளது.

ஏமனில் இருந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் வெள்ளிக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவினர். இதனை டெர்மினல் ஹை ஆல்டிடியூட் ஏரியா டிஃபென்ஸ் (THAAD) கட்டமைப்பைப் பயன்படுத்தி இஸ்ரேல் இடைமறித்து அழித்துள்ளது. இந்த ஏவுகணை தடுப்பு தொழில்நுட்பத்தை கடந்த அக்டோபர் மாதம் ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க அரசு இஸ்ரேலுக்கு வழங்கியது. இந்நிலையில் அந்த தொழில்நுட்பத்தை இஸ்ரேல் முதல் முறையாக பயன்படுத்திய வீடியோ இணையத்தில் வெளியாகி உள்ளது. அதில், தாட் அமைப்பு இடைமறிக்கும் கருவியை ஏவுவதும், அதைத் தொடர்ந்து ஒரு அமெரிக்க வீரர், பதினெட்டு ஆண்டுகளாக நான் இதற்காகக் காத்திருக்கிறேன் என்று கூறுவதும் பதிவாகி உள்ளது.

தாட் ஏவுகணை தடுப்பு அமைப்பு அமைப்பு பூமியின் வளிமண்டலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஏவுகணைகளை இடைமறிக்கும் திறன் கொண்டது. அமெரிக்காவால் உருவாக்கப்பட்டது, இந்த அமைப்பு குறுகிய, நடுத்தர மற்றும் இடைநிலை பாலிஸ்டிக் ஏவுகணைகளை அவற்றின் முனைய கட்டத்தில் இடைமறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது தாக்குதல்களை தடுக்க தாட், இயக்க ஆற்றலை நம்பியுள்ளது, அதாவது வெடிக்கும் போர்க்கப்பலை விட அதிக தாக்கத்தை உருவாக்கி உள்வரும் ஏவுகணைகளை தாட் அழிக்கிறது. ஒரு தாட் பட்டரி, ஆறு டிரக் - லொஞ்சர்களை உள்ளடக்கியது, ஒவ்வொன்றும் எட்டு இடைமறித்து அழிக்கும் தடுப்புகளை வைத்திருக்கும். அதனுடன் ஒரு ரேடார் மற்றும் தீ கட்டுப்பாட்டு அமைப்பு பொருத்தப்பட்டிருக்கும். தாட் - இன் ரேடார் 870 முதல் 3,000 கிலோமீட்டர் தொலைவிலான ஏவுகணை அச்சுறுத்தல்களைக் கண்டறியும் வல்லமை உடையது.

# பாகிஸ்தானில் பெய்த பணமழை



பாகிஸ்தானில் தனது மகனின் திருமண விழாவையொட்டி வாடகைக்கு விமானத்தை எடுத்து பறந்த தொழிலதிபர் ஒருவர் மணப்பெண்ணின் வீட்டை நோக்கி இலட்சக்கணக்கான பணத்தை எடுத்து பூ போல் வீசிய வீடியோ இணையத்தில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது. ஒவ்வொரும் தங்களின் திருமணத்தை வித்தியாசமாக நடத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். ஒரு தரப்பினர் இலட்சக்கணக்கில் பணம் செலவழித்து ஆடம்பரமாக திருமணம் செய்ய விரும்புகின்றனர். இன்னொரு தரப்போ குறைந்த பண செலவில் சாதாரணமாக திருமணத்தை நடத்த விரும்புகின்றனர்.

பாகிஸ்தான் நாட்டின் சிந்து மாகாணத்தில் ஹைதராபாத் என்ற நகரில் உள்ள இளம்பெண்ணுக்கும், இளைஞர் ஒருவருக்கும் திருமணம் நடந்தது. இந்த திருமணத்தையொட்டி மணமகனின் தந்தை வாடகைக்கு விமானத்தை எடுத்து இருந்தார். தனது மகன், மருமகள் மற்றும் உறவினர்களை விமானத்தில் அழைத்து சென்றார். அதுமட்டுமின்றி தனது மகனுக்கு பெண் கொடுத்த சம்பந்தி வீட்டாருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவர் விமானத்தில் வலம் வந்தார். விமானம் வானில் பறக்கவே தொழிலதிபர் சார்பில் சம்பந்தி வீட்டை நோக்கி இலட்சக்கணக்கான பணம் வீசப்பட்டது.

வானில் இருந்து பணம் மழையாக கொட்டினால் எப்படி இருக்குமோ அந்த வகையில் ரூபாய் தாள்கள் பூமியை நோக்கி வந்தன. வானில் இருந்து பணம் கொட்டுவதை பார்த்த அந்த பகுதி மக்கள் அதனை எடுத்து சென்றனர். இதுதொடர்பான வீடியோ தற்போது இணையதளங்களில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது.

# இஸ்ரேல் பிரதமரை எதிர்த்து மக்கள் பேரணி



காஸாவில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் இஸ்ரேல் கைதிகள் உள்ள நிலையில் எஞ்சிய பணயக்கைதிகளை திருப்பி அனுப்பும் ஒப்பந்தத்தை இஸ்ரேல் அரசு எட்ட வேண்டும் என்று கோரி ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் டெல் அவிவ் நகரில் நெதன்யாகுவை கண்டித்து பேரணி நடாத்தினர்.

பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த வருடம் அக்டோபர் 7ம் திகதி ஹமாஸ் அமைப்பு அந்நாட்டில் அல்-அக்ஸா திட்டம் மூலம் திடீர் தாக்குதலை நடாத்தியது. இதில் 1200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 250 பேர் வரை பணயக் கைதிகளாக அழைத்துச்செல்லப்பட்டனர். தாக்குதலுக்கு பழிக்குப் பழி வாங்க கடந்த 13 மாத காலமாக காஸா உள்ளிட்ட பலஸ்தீன நகரங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி 45 ஆயிரத்துக்கும் அதிகமானோரைக் கொன்று குவித்துள்ளது. இதில் 1 இலட்சத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். ஹமாஸ் கட்டுப்பாட்டில் இன்னும் 100 இஸ்ரேல் கைதிகள் வரை உள்ள நிலையில் காஸாவில் ஹமாஸ் பிடியில் இருக்கும் எஞ்சிய பணயக்கைதிகளை திருப்பி அனுப்பும் ஒப்பந்தத்தை இஸ்ரேல் அரசு எட்ட வேண்டும் என்று கோரி ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் டெல் அவிவ் நகரில் நெதன்யாகுவை கண்டித்து பேரணி நடத்தினர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த வாரம் உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் ஜெருசலேமில் உள்ள ஹடாசா மருத்துவ மையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவரது சிறுநீர் பாதையில் தொற்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து நெதன்யாகுவுக்கு நேற்று குடலிறக்க அறுவைச் சிகிச்சை செய்ய உள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்தின் மூத்த அதிகாரிகள் இந்த மாத ஆரம்பத்தில் 14 மாத கால போரை நிறுத்த தங்கள் மத்தியஸ்த முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்தனர், ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டுவர இரு தரப்பிலும் நேர்மறையான முடிவு எட்ட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகி வருகிறது.

# எச்.1பி விசாவிற்கு கட்டுப்பாடு இல்லை
## ட்ரம்ப் அறிவிப்பு

அமெரிக்காவில் வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கப்படும் எச்1-பி விசாவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படலாம் என்று தகவல் வெளியானதைத் தொடர்ந்து நான் எப்போதும் விசாக்களுக்கு ஆதரவாக இருக்கிறேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ட்ரம்ப் வருகின்ற ஜனவரி 20ம் திகதி பதவியேற்க உள்ளார். அவர் தனது ஆட்சியில் குடியேற்றம் தொடர்பாக கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளார். இதனால் வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கப்படும் எச்1-பி விசாவுக்கு கட்டுப்பாடு விதிக்கபடலாம் என்று தகவல் வெளியானது. இந்த நிலையில் ட்ரம்ப், மிகவும் திறமையான தொழிலாளர்கள் நாட்டிற்குள் நுழைய உதவும் சிறப்பு விசா திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். நான் எப்பொழுதும் எச்1-பி விசாக்களை விரும்புகிறேன் அவற்றுக்கு எப்போதும் ஆதரவாக இருக்கிறேன். அதனால்தான் நாங்கள் அவற்றை வைத்திருக்கிறோம் என்றார்.

ட்ரம்பின் ஆதரவாளரும், அவரது ஆட்சி நிர்வாகத்தில் உயர் பதவி அளிக்கப்பட்டுள்ள எலான் மஸ்க், வெளிநாட்டில் இருந்து உயர் பொறியியல் திறமைகளை கவர்வது அமெரிக்கா வெற்றி பெறுவதற்கு அவசியம் என சமீபத்தில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடையும் அபாயம்

வெப்பநிலை உயர்வு காரணமாக உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஒவ்வொரு பகுதியும் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. வெப்ப அதிகரிப்பு காரணமாக பனிப்பாறைகள் உருகி வருகின்றன. இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடையும் நிலையில் உள்ளது. கடந்த 1986ம் ஆண்டு அந்தாட்டிக்காவில் உள்ள பில்ச்னர் பனிக்கட்டியில் இருந்து பனிப்பாறை உடைந்து பிரிந்தது. உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான அதற்கு ஏ23ஏ என்று பெயரிடப்பட்டது. சில வாரங்கள் கடலில் இந்த பாறை நகர்ந்தது. அதன்பின் வெட்டெல் கடலில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகில் உறைந்தது. இந்த நிலையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கும் நகராமல் உறைந்து இருந்த உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடைந்து நகர ஆரம்பித்துள்ளது. இந்த பனிப்பாறை அடுத்த ஒரு மாதத்திற்குள் உடைந்து விடும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வெப்பநிலை உயர்வு காரணமாக பனிப்பாறை உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏ23ஏ பனிப்பாறை இனி இவ்வளவு பெரிதாக நீடிக்க முடியாது. அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக மேலும் உடையும். இதன் காரணமாக கடலின் நீர் மட்டம் உயரும். இதனால் கடல் நீர் ஊருக்குள் புகும் அபாயம் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உலகம் முழுவதும் காலநிலை மாற்றம்; 3,700 பேர் உயிரிழப்பு

ஒவ்வொரு ஆண்டும் காலநிலை மாற்றத்தால் உலக நாடுகள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. அந்த வகையில் காலநிலை மாற்றம் காரணமாக இந்த ஆண்டு மட்டும் (2024) உலகம் முழுவதும் 3,700 பேர் இறந்துள்ளதாக லண்டனை சேர்ந்த உலக வானிலை கண்காணிப்பகம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும், காலநிலை மாற்றத்தால் ஆண்டின் சராசரி வெப்ப நாட்களில் 41 நாட்கள் கூடுதலாகி உள்ளன. மேலும் கடும் வெயில், வறட்சி, காட்டுத்தீ, வெள்ளம் மற்றும் புயல் காரணமாக உலகநாட்டு மக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். சூடான், நைஜீரியா, கேமரூன் ஆகிய நாடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 2 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்கள்

சர்வதேச கிரிக்கெட் சபையால் 2024 ஆம் ஆண்டுக்கான வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்களுக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது இந்தத் தேர்வுப்பட்டியலில் எட்டு நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் 2024 டிசம்பர் 29 மற்றும் 30 திகதிகளில் ஐசிசி விருதுகள் 2024க்கான ஏழு தேர்வுப்பட்டியல்கள் வெளியிடப்படவுள்ளன. வெற்றியாளர்களை, சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் முக்கிய குழு தேர்வு செய்யும். பின்னர் ,இது தொடர்பான முடிவுகள் எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் அறிவிக்கப்படும். ஐசிசியின் வளர்ந்து வரும் ஆண்கள் கிரிக்கெட் வீரர் விருதுக்கான போட்டியில் நான்கு வலுவான போட்டியாளர்கள் போட்டியிடுகின்றனர். இங்கிலாந்தின் கஸ் அட்கின்சன்,பாகிஸ்தானின் சைம் அயூப், மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் சமர் ஜோசப் மற்றும் இலங்கை வீரர் கமிந்து மெண்டிஸ் ஆகியோரும் இறுதிப் பட்டியலில் இணைந்துள்ளனர்.

ஐசிசியின் வளர்ந்து வரும் மகளிர் கிரிக்கெட் வீராங்கனை விருதுக்கு தென்னாப்பிரிக்க சகலதுறை வீராங்கனை அன்னெரி டெர்க்சன், ஸ்காட்லாந்தின் சஸ்கியா ஹார்லி, இந்தியாவின் சிரேயங்கா பட்டேல்



# உலக அதி வேக சதுரங்க போட்டி
## இந்திய வீராங்கனை சம்பியன்

உலக அதி வேகச் சதுரங்க சம்பியன்ஷிப் பட்டத்தை இந்தியாவின் கிராண்ட்மாஸ்டர் கொனேரு ஹம்பி கைப்பற்றியுள்ளார். இந்த பட்டத்தை அவர் இரண்டாவது முறையாக வென்றுள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தோனிசியாவின் ஐரீன் சுகந்தரை வீழ்த்தி கொனேரு ஹம்பி இந்த பட்டத்தை வென்றுள்ளார்.

இதற்கு முன்பு கொனேரு ஹம்பி 2019 ஆம் ஆண்டு ஜோர்ஜியாவில் நடைபெற்ற போட்டியில் உலக அதி வேகச் சதுரங்க சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார்.

கொனேரு ஹம்பிக்கு 37 வயதாகிறது. பெண்கள் பிரிவில், 11 சுற்றுகளுடன் நடைபெறும் இந்த போட்டியில் அவர் 8.5 புள்ளிகளைப் பெற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளார்.



# பும்ரா புதிய வரலாறு படைப்பு : குறைந்த சராசரியில் 200விக்கெட்டுகள்



(ஆர்.மனோசங்கர்)

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 20க்கும் குறைவான சராசரியுடன் 200க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் என்ற சாதனையைப்

மெல்போர்னில் அவுஸ்திரேலியா எதிரான போர்டர்-டெஸ்ட் தொடரின் நான்காம் போட்டியின், நேற்று நான்காம் நாள் ஆட்டத்தின் போது அவர் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

தனது 44வது டெஸ்ட் போட்டியில் விளையாடும் பும்ரா, 19.38 சராசரியுடன் 202 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் மிகவும் குறைந்த சராசரியுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 200க்கும் மேற்பட்ட

பந்து வீச்சாளர் படைத்துள்ளார். நடந்து வரும் அணிக்கு கவாஸ்கர்

விக்கெட்டுகளை வீச்சாளர்களின் முதலிடத்தைப் அவருக்கு தீவுகள் (376



வீழ்த்திய பந்து பட்டியலில், பும்ரா பிடித்துள்ளார்.

அடுத்ததாக மேற்கிந்திய அணியின் மால்கம் மார்ஷல் விக்கெட்டுகள், 20.94 சராசரி), ஜோயல் கார்னர் (259 விக்கெட்டுகள், 20.97 சராசரி) மற்றும் கர்ட்லி அம்ப்ரோஸ் (405 விக்கெட்டுகள், 20.99 சராசரி) ஆகிய மூவரும் உள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுகளை வேகமாக வீழ்த்திய இரண்டாவது இந்தியர் இவர்தான். முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் 37 போட்டிகளுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

# போட்டி சமநிலையானால் கிண்ணம் இந்தியாவுக்கு

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியை இந்திய அணி சமன் செய்யுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது ஒருவேளை இந்திய அணி மெல்போர்னில் நடைபெற்று வரும் நான்காவது டெஸ்ட் போட்டியை சமன் செய்தால் இந்த தொடரை 1 – 1 என இந்திய அணி கிண்ணத்தைத் தக்க வைக்க அதிக வாய்ப்பு உள்ளது.

தற்போது நான்காவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்தின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 333 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இந்திய அணிக்கு ஐந்தாம் நாளில் 350 ஓட்டங்கள் என்ற இலக்கை நிர்ணயிக்க வாய்ப்புள்ளது. அவ்வளவு பெரிய இலக்கை டெஸ்ட் போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டத்தில் எட்டுவது கடினமே. அதே சமயம், அவுஸ்திரேலிய பந்துவீச்சைச் சமாளித்து சமன் செய்வதும் சவாலான விடயமே.



இந்திய அணி தற்போது இருக்கும் நிலையில், சமன் செய்வதை நோக்கி ஆடுவதே சரியான முடிவாக இருக்கும்.

ஏற்கனவே, இந்திய அணி நான்கு முறை தொடர்ந்து பார்டர் – கவாஸ்கர் கிண்ணத்தை வென்றுள்ளது. கடைசியாக 2021 ஆம் ஆண்டில் இந்திய மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி கிண்ணத்தை இந்திய அணி தக்க வைத்திருந்தது, எனவே, விதிப்படி தற்போது நடைபெற்று வரும் தொடர் சமனில் முடிவடைந்தால் முந்தைய தொடரில் வெற்றி பெற்ற இந்திய அணி வசமே கிண்ணம் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 30ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.